செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ககூகூகூ. மார்.	பகுதி
சூச	டிசம்பர்—1968	உ

இராசராச சோழனின் மாண்பு

திரு. சூ. மி. டயசு, I. P. S. திருச்சி.

தமிழகத்தின் வரலாற்றிலே கடைச்சங்க காலத்தையும், இராசராசசோழன் காலத்தையும் எல்லா வகையிலும் மேம்பட்ட பொற்காலமாக அறிஞர்கள் கருதுவார்கள். முதலாவது பொற் காலம் மதுரையை மையமாகக்கொண்டு, இரண்டாயிரம் ஆண்டு களுக்குமுன் நிலவி வந்தது. இரண்டாவது பொற்காலமோ தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன் அமைந்திருந்தது. ஓர் ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறைதான் தமிழகத்துக்குப்பொற்காலம் ஏற்படவேண்டுமென்று வரலாற்று நியதி ஏதும் உண்டோ? அறியேன். ஆனால், அந்த முறையில்

பார்க்கும்போதும்கூட இன்று நாம் இருப்பது தமிழகத்தின் மூன்றாவது பொற்காலத்தின் தொடக்கமாக இருக்கலாமோ என்று நினைக்க இடமுண்டு. அப்படி எண்ணுவதற்கு வேறு தகுந்த காரணங்களும் இல்லாமலில்லை. 1947–ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெற்றபின் கல்வியிலும், விவசாயம்-தொழில்துறையிலும், மொழி வளர்ச்சியிலும் தமிழகம் படிப்படியாக முன்னேறிக்கொண்டு வந்திருக்கின்றது. இந்த வளர்ச்சி இன்னும் வேகம் பெற்று வளமான ஒரு உச்சநிலையை அடையக்கூடிய சூழ்நிலை இன்று உள்ளதால், ஏறக்குறைய கி. பி. 2,000-ஆம் ஆண்டை ஒட்டித் தமிழகம் மிகச் சிறந்த ஒரு மூன்றாவது பொற்காலநிலையை அடையும் என்று நாம் நியாயமாக எதிர்பார்க்கலாம்.

2. "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே"

என்பது ஔவைப் பிராட்டியின் வாக்கு. சோழவளநாட்டின் உயிர் நாடியான காவிரி ஆற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டிய கரிகாலன் முற்காலச் சோழ மன்னர்களில் பெயர் பெற்றவன். அவனது தலைநகர் இன்றைய திருச்சியில் உள்ள உறையூர் என்பது வரலாறு. அக்காலத்திலே சோழ நாடு அடைந்து இருந்த பெருமையை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில், பூம்புகார்ச் சிறப்பைச் சொல்லும் வகையில் மிக அழகாக வர்ணித்திருக்கின்றார். அதற்கு முன்னும் சோழர்கள் சிறப்புடன் ஆண்டனர் என்பது மகாபாரதத்தின் வாயிலாகத் தெரிய வருகிறது. ஆனால் அக்காலத்திற்குப் பின் களப்பிரர் வருகையினாலும், பல்லவர் எழுச்சியினாலும், பாண்டியர் எதிர்ப்பாலும், சோழநாட்டுவளர்ச்சி குன்றி நின்றது. மீண்டும் சோழர் குடியையும், நாட்டையுமு தலைதூக்கச் செய்தவன் இராசராசன் மரபுக்கு முன்னோடியாகத் தோன்றிய விசயாலயன் ஆவான். விசயாலய சோழன் முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி, அதைத் தலைநகராக வைத்துக் கி. பி 846-ஆம் ஆண்டிலிருந்து 880-ஆம் ஆண்டுவரை சிருடன் ஆண்டு வந்தான். இந்த வம்சத்திலே வந்த இரண்டாம் பராந்தகன் கி. பி 954–ஆம் ஆண்டுமுதல் 973–ஆம் ஆண்டுவரை நல்லரசுசெய்துவந்ததாகவும்,

"வீர பாண்டியனைச் சுரம்இறக்கிய சுந்தரசோழன்" என்று பாராட்டப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. இவனது மனைவியின் பெயர் வானவன் மாதேவியார் என்பது

3. சுந்தரசோழனுகிய இரண்டாம் பராந்தகனுக்கு இளைய மகனுகப் பிறந்த இராசராசன் இன்ன ஆண்டில் பிறந்தான் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் தஞ்சை இராசராசேச்சரத்திலும், திருவையாறு ஒலோக-மாதேவீச்சரத்திலும், "உடையார் இராசராசதேவர் திருச்சதயத் திருவிழா" எனத் திங்கள்தோறும் கொண்டாடப்பட்டமையாலும், சேரநாட்டில் இராசராசன் பெற்ற காந்தளூர் வெற்றிக்குப் பிறகு "திருநந்திக்கரை" சிவாலயத்தில் "ஐப்பசி மாத சதய நாளை"த் தன் பிறந்த நாளாகக் கொண்டாடியதாக வரலாறு கூறுகின்ற காரணத்தாலும், ஐப்பசித்திங்கள் சதயநாளே இராசராசனுடைய பிறந்த நாள் என்பது தெரிய வருகின்றது. இராசராசனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பது. இரண்டாம் பராந்தகனுக்குப் பின் பட்டத்திற்கு வர இருந்த அவனது மூத்த மகனை இரண்டாம் ஆதித்தன் திடீரென உயிர் துறந்தான். அவனது சிற்றப்பனை உத்தம சோழன் என்ற மதுராந்தகனே அவனைக் கொல்லுவித்ததாகவும் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறர்கள். இந்நிலையில் இளைய மகனை அருண்மொழி வர்மன் என்ற இராசராச சோழனையே அரியணை ஏறும்படி மக்கள் விரும்பியதாகத் தெரிகின்றது. ஆனால் இளமையிலேயே அறிவிலும், கண்ணோட்டத்திலும், ஒப்புரவிலும் சிறந்து விளங்கிய அருண்மொழி வர்மன், சிறந்த நியாய உணர்ச்சியோடு தன் பெரிய மகனை மதுராந்தகன் அரசாள விரும்பும் வரையில் அவனே அரசாளட்டும் என்று சொன்னது மிகவும் பாராட்டுதற்குரியது ஆகவே கி பி 973-ஆம் ஆண்டு முதல் 985-ஆம் ஆண்டு வரை உத்தமசோழன் என்ற மதுராந்தகன் அரசாண்டு வந்ததாகத் தெரிகிறது.

4. கி பி. 985 ஆம் ஆண்டுதான் அருண்மொழித் தேவன் என்ற இராசராசசோழன் 'இராசகேசரி' என்ற பட்டத்துடன் அரியணை ஏறினன். அவனதுஆட்சிக்காலம் கி.பி 985-ஆம் ஆண்டு முதல் சற்றேறக்குறைய 30 ஆண்டுகள் சிறப்புடன் நீடித்தது.

இராசராசன் பட்டத்திற்கு வந்தபொழுது பழைய சோழநாடும், கொங்குநாடும் அவன் ஆதிக்கத்தில் இருந்தன. முதல் சில ஆண்டுகளிலே அவன் அரசியல் அலுவல்களைத் திறமையுடன் கவனித்து, உள்நாட்டுக் கலகங்களை அடக்கி, நாட்டிற்கு நல்ல அரண் அமைத்தும், வருங்காலத்தில் தன்னுடைய பகைவர்களோடு பொருது வெற்றிபெறுவதற்கு வேண்டிய பெரும் படைகளையும், போர்க் கருவிகளையும் ஆயத்தப்படுத்தியும் வந்தான் என்று தெரிகிறது. தான் மேற்கொண்ட பணியை வெற்றியுடன் முடிக்கும் ஆற்றல் படைத்த ஒரு தலைவன்,

“பொருள்கருவி காலம், வினைஇடனோ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்”

வேண்டும் என்பது வள்ளுவர் போதனை. ஆகவே, திருவள்ளுவர் காலத்திற்கு ஓராயிரம் ஆண்டுகட்குப் பின்னர் வாழ்ந்த இராசராசன் தன் நாட்டை விரிவுபடுத்த இளம் பருவத்திலே கண்ட கனவுகளை நனவாகச் செய்யுமுன் இப்போதனையைச் செயல் முறையில் கையாண்டிருக்கிறான் என்பது தெளிவு.

5. இவனது படையெடுப்புக்களையும், வெற்றிகளையும் பற்றிய விவரங்கள் நல்ல “வரலாற்று உணர்ச்சியும், பிடிப்பும்” உடைய இராசராசன் காலத்திலேயே எழுதப்பட்ட ‘‘மெய்க்கீர்த்தி’’ என்னும் குறிப்புக்களின் வாயிலாக அறியக் கிடக்கின்றன. இராசராசனின் வெற்றிகளைப் பற்றிச் சொல்லும் “மெய்க்கீர்த்தி”

‘‘திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்

னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் இராசராச தேவர்க்கு யாண்டு''

என்பது. தன் தூதுவனை அவமதித்த சேரனைப் புறங்காணத் தொடங்கியதாகச் சொல்லப்படும் இம் மாவீரனது படையெழுச்சி எட்டுத்திக்குமுள்ள எல்லா அண்டை நாடுகளையும் தோற்கடித்துக் கப்பம் கட்டும் வரை வெற்றி நடையுடன் சென்றது. உலக வரலாற்றிலே தோல்வி என்பதையே காணுத மாபெரும் வீரர்களில் ஒருவன் இராசராச சோழன் காந்தளூர்ச் சாலையில் சேரனும், வழியிலே பாண்டியனும் தோல்வியுற்றனர்: இதனுல் இவனுக்கு மும்முடிச் சோழன் என்ற பெயர் உண்டாயிற்று. பிறகு வேங்கை நாட்டுக் கீழைச் சாளுக்கியரை முறியடித்துச் சத்தியவர்மன் என்பவனைவேங்கைநாட்டு அரசனுக்கினன். அடுத்துக் காவிரிக்கரையில் தாலக்காடு என்னும்ஊரைத் தலைநகராகக்கொண்ட இன்றையமைசூர்ப் பகுதியான, கங்கபாடி நாட்டை வெற்றி கொண்டான். அவ்வூருக்கு "இராசராசபுரம்'' என்ற பெயரும் இடப்பட்டது. பிறகு அதற்கு அருகிலேயுள்ள நுளம்பபாடி, தடிகைபாடி என்ற சிறு பல்லவ நாடுகளையும்சோழ நாட்டோடு சேர்த்துக்கொண்டான். அதேபோலக் குடகு நாடும், சோழ நாட்டின் பகுதியாயிற்று. இறுதிக் கட்டத்தில் சேர நாட்டிலே கொல்லத்திலும், கலிங்காட்டிலே மயேந்திர மலையிலும், அவனுக்கு இரு ஒப்பற்ற வெற்றிகள் கிடைத்தன. கொல்லம், கலிங்கம் வென்றதோடு நில்லாமல் "அலைகடல் நடுவில் பலகலம் செலுத்தி'' ஈழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டின் வடபகுதியையும் சோழ மண்டலமாக்கி விட்டான். அடுத்து, ஏழரை இலக்கமுள்ள இரட்டபாடி மீது படையெடுத்து, வெற்றி கொண்டான். இறுதியாக மீண்டும் கடல்கடந்து சென்று "முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும்'' தனதாக்கிக் கொண்டான். இது மல்லத்தீவு, இலட்சத்தீவு என்ற சிறு தீவுக் கூட்டங்களைக் குறிக்கும் என்று எண்ணப்படுகிறது. இவ்வாறு இராசராசன் எட்டுத் திக்கிலும், நீரிலும், நிலத்திலும், சென்ற இடமெல்லாம் வெற்றி பெற்றுச் "செயங்கொண்ட சோழனுக'' நாடு திரும்பினன்.

6. இராசராசனுக்கு மனைவியர் பலர் இருந்த போதிலும் அவர்களில் முதலிடம் பெற்றவர் உலோகமகாதேவி என்று அழைக்கப்படும் தந்தி சக்தி விடங்கியார் ஆவர். இராசராசன் திருவிசலூர் மகாதேவர் கோயிலிலே 'துலாபாரம்' புக்கபொழுது பட்டத்தரசியான தந்தி சக்தி விடங்கியார் எனும் உலோக மாதேவியாரும் உடன் 'இரணிய கருப்பம்' புக்கதாகக் கல்வெட்டி லிருந்து காணப்படுகின்றது. இராசராசன் தஞ்சையிலே பிரகதீச் வரர் கோயிலை அமைத்தது போல உலோகமாதேவியார் திருவையாற்றில் உலோக மகாதேச்வரம் என்ற கோயிலை அமைத் தார். இவனுக்கு இராசேந்திரன் என்ற மகனும், இரண்டாம் குந்தவை என்ற மகளும் இருந்தார்கள். முதலாம் குந்தவை என்பது இராசராசனின் மூத்த சகோதரியின் பெயர். மாதேவடிகள் என்ற பெயருடைய இன்னொரு மகளும் இவனுக்கு உண்டென்றும் சிலர் சொல்லுவார்கள். தந்தை இருந்த காலத் திலேயே பல படையெழுச்சிகளுக்கு, இளவரசனான இராசேந் திரனே படைகளை நடத்திச்சென்று வெற்றி கண்டதாக அறியப் படுகின்றது. பிற்காலத்தில் இராசேந்திரன் தன் தந்தை கண்ட வெற்றிகளை இன்னும் விரிவுபடுத்திக் கங்கையும் கடாரமும் கொண்டதாக வரலாறு. இராசராசன் கல்வெட்டுக்களிலே தனது வெற்றிக்குக் காரணமான பல்வேறு படைக் குழுவினரின் பெயர் களைக் கொடுத்திருப்பதிலிருந்து, இம் மன்னன் தன் போர்வீரர் களின் மேல் நிறைந்த அன்பு கொண்டிருந்தான் என்பது தெளிவாகத் தெரியவருகின்றது. அதுவன்றி இராசராசன் பெரிய வீரன் மாத்திரமன்று, தன்னைச் சார்ந்தவர்களின் தகுதி தெரிந்து அவர்கள் பணியைப் போற்றும் உயர் பண்பு வாய்ந்த பெரிய மனிதனும் ஆவான் என்பதையும் இது காட்டுகிறது.

7. எட்டுத் திக்கிலும் வெற்றி பெற்று மீண்ட இராசராசன், தனது பெருநாட்டைப் பல மண்டலங்களாகவும், வளநாடுகளாக வும், நாடுகளாகவும், கோட்டங்களாகவும், கூற்றங்களாகவும், ஊர்களாகவும் வகுத்து அரசு செலுத்தினான். அகன்ற தனது நிலப் பரப்பினை அவன் அளந்து திறை பெற்ற காரணத்தினால் இம் மன்னனுக்கு "உலகளந்தான்" என்ற ஒரு பெயரும் அமைந் தது. இராசராசேச்சரத்தில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்

களிலும், மற்றும் செப்புப் பட்டயங்களிலும் 'அளந்தபடி நிலம்' என்ற சொற்றொடர் காணப்படுகின்றது. நிலம் அளந்த கோலின்பெயர் 'உலகளந்தகோல்' என்றுசொல்லுவார்கள். நிலம் குடிகட்கே உரியது என்பது, திரு இராசரர்சத் தேவருடைய கருத்து. இதற்கு ஒத்த முறையில் இராசராசன் காலத்திலே ஊர்கள்தோறும் ஊர்ச்சபைகள் அமைக்கப்பெற்றிருந்தனவாகவும் தெரிய வருகிறது. இக்குழுவினர் ஊரிலுள்ள நிலங்களுக்கு அரசிறை ஏற்படுத்தி அரசனுக்குச் செலுத்தினமையும், இறை கொடாத நிலத்தை ஊர்ப் பொதுவாக்கி விற்றமையும், நாட்டில் நடக்கும் நன்மை தீமைகளை ஆராய்ந்து தக்கவாறு தண்டம் விதித்தமையும், இராசராசேச்சரத்திற்கு மெய்க்காவலர் கணக்கர் அனுப்பி வந்தமையும், வரலாற்று ஏடுகளில் காணக்கிடக் கின்றது. இக் குழுவில் உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்படுபவர் காணிக்கடனுக்கு ஏற்ற நிலமும், சொந்த மனையும், அறவழியில் ஈட்டிய பொருளும் உடையராய்க், கல்வி நிரம்பி, ஒழுக்கங் குன்றாது, காரியம் நிறைவேற்றுதலில் வல்லுநராக இருத்தல் வேண்டும் என எதிர்பார்த்தனர். கிராமக் குற்றப்பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவரும், மற்றும் கள்ளக் கையெழுத்திடல், கொலை, களவு, கள்ளுண்டல் முதலிய தீய செயலில்ஈடுபட்டவரும், கையூட்டுக்கொண்டாரும் இச்சபைகளில் சேரத்தக்கவர் அல்லர். இக்குழுவினர் கூடுதற்குரிய நாளையும், காலத்தையும், எக்காளம் ஊதுவித்து உறுப்பினர்க்கு உணர்த்தி வந்தனர் என்பதும், வேண்டியபொழுது பகலிலும், இரவிலும் சபைகூடிக் காரியங்களை நடத்தினர் என்பதும் இராசராசனது 16-ஆம் ஆண்டுக் குறிப்புகளிலிருந்து காணலாம். இராசராசன் காலத்தில் நீதிமுறையும், சட்டங்களும் மிக உயர்ந்த பண்பாட்டு அடிப்படையில் ஏற்பட்டிருந்தனவாகத் தெரிகிறது. நெப்போலி யன் தனக்குக்கிட்டியவெற்றிகளைப்பற்றிப் பெருமைகொண்டதை விட அதிகமாக, தான் வகைப்படுத்தியசட்டத்தொகுப்பைப்(Code Napoleon) பற்றிப் பெருமை கொண்டான் என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்வார்கள். அதுபோல, இராசராசனின் சட்டங் களும் மிக முற்போக்கானவையாக அமைந்திருந்தன. வேட்டை யாடப் போனவன் தவறுதலாக ஒரு குடியானவனைக் கொன்று விட்டால், அதற்குக் குறைவான தண்டனை (Sec. 304-A, I. P. C.),

மெக்காலே காலத்து ஆங்கிலச் சட்டத்தில் கூட இல்லாதது, இராசராசன் காலத்தில் இருந்தது.

8. இதுவன்றி, இராசராசன் காலத்தில் பண்டமாற்று நெல்லின் அடிப்படையில் சிறப்பாக நடைபெற்றமை அறியக் கிடக்கின்றது. அக்காலத்தில் நெல் விளைச்சல் மிக நன்முக இருந் திருக்க வேண்டும். நெல் முதலிய கூலவகைகள் பலவும் விற்கப் படும் பேரங்காடிகளும், ஆடைகளும், பொன்னும், மணியும் மாற்றப்படும் மறுகுகளும், அக்காலத்தில் பரவலாக இருந் தனவாக அறிய இடமுண்டு. இலாபகரமான கைத்தொழில் களும் ஆங்காங்கே வளர்ந்து வந்திருக்க வேண்டும். அரச முத்திரையிடப்பட்ட அளத்தல் கருவிகளும், நாணயங்களும் மக்களிடையே அப்போது பழக்கத்திலிருந்து வந்தன. உழவு, வாணிபம், கைத்தொழில் என்ற மூன்றும் சிறப்புற்று இருக்கும் நாட்டில் செல்வம் பண்பட்டு, செழித்து இருப்பது வழக்கு. அம்முறையில் சோழ நாட்டின் அன்றைய நிலை கம்ப ராமாயணத் தில் கவிப்பேரரசு,

"கலம் சுரக்கும் நிதியம்; கணக்கிலா
நிலம் சுரக்கும் நிலவளம்; நன்மணி
பிலம் சுரக்கும்; பெறுதற்கு அரியதம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்"

என்று அழகாகக் குறிப்பிட்டபடி, இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம். இதுவுமன்றி எல்லா வளங்களும் நிறைந்த இந்த நாட்டில் கல்வி வளமும், சீரும் சிறப்புடன் பரவி இருந்தது என்று கொள்ளத்தகும். இத்தகைய கல்வி வளர்ச்சிக்குத் தெய்வீகமான ஒரு முடிசூட்டும் பாணியில் இராசராசசோழன், நெடுங்காலமாகத் தில்லையில் மறைந்து கிடந்த தேவாரப் பதிகங்களை, நம்பியாண்டார் நம்பி என்ற பேரறிஞர் உதவியால் மீட்டு வந்து, ஏழு திருமுறைகளாகச் சீருடன் வகுத்துத் தமிழகத் துக்கு ஈந்தான். திருத்தொண்டர் அந்தாதியும் இக்காலத்தில் இயற்றப்பெற்றது.

9. இராசராசசோழன் ஒரு மாவீரன், பேரரசன், பெரிய மனிதன் என்று சொன்னேன். அவைமட்டுமல்ல, அவன்

ஒப்பற்ற ஒரு கலைஞனும் ஆவான். இங்கிலையில், கலை என்ருல் என்ன என்ற கேள்விக்கு, எனது காலஞ்சென்ற நண்பர் தொ. மு. பாசுகரத் தொண்டமான் அவர்கள்,

"காணுகின்ற காட்சியிலே
கண்டுமனம் தான்லயித்து
பேணுகின்ற அனுபவத்தைச்
சொல்லாலும் இசையாலும்
சொலற்கரிய நடத்தாலும்
கல்லாலும் வணத்தாலும்
காட்டுவதே கலையாகும்"

என்று மிக்க எழில்காணப் பதில் தந்தது எனது நினைவிற்கு வருகின்றது. இந்தக் கலை இலக்கணத்திற்கு இராசராச சோழன் முற்றிலும் பொருத்தமானவன். அவனுடைய எண்ண எழுச்சிகளும், கலை உணர்ச்சிகளும் கருத்தோவியங்களாக வெளிப்பட்டு ஆங்காங்குள்ள பல கலைஞர்களின் ஒன்றுபட்ட சேவையின் மூலமாகக் கல் ஓவியங்களாகவும், சொல் ஓவியங்களாகவும் சமைக்கப்பட்டு, இன்று நமக்குக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. Encyclopaedia Britanica என்ற புத்தகத்தில் "தமிழ் மக்கள் உலகத்திலே மிகச் சிறந்த கோயில் கட்டும் கலைத் திறமையுடையவர்கள்; தஞ்சைக் கோயில் இந்தியாவிலே உள்ள கோயில்களில் தலைசிறந்தது" என்று எழுதப்பட்டிருந்தது. அத்தகைய மாபெரும்கலைக்கோயிலைக் கல்லினுல்படைத்துத் தன்னேர்முன்னே கட்டி முடித்த தனிப்பெருமை இராசராச சோழனையே சாரும். கருங்கல் கிடைக்காத சமவெளியான தஞ்சைத் தரணியிலே 35 மைல் தூரத்திலுள்ள மலைப் பிராந்தியத்திலிருந்து மாபெரும் கருங்கற் பாளங்களைக் கொண்டுவந்து, செதுக்கி அழகுபடுத்தி இக்கோயில் கட்டப்பட்டிருக்கின்றது இது கட்டிய முறைபற்றிப் பல குட்டிக் கதைகளும் ஆங்காங்கு நாம் கேள்விப்பட்டிருக்கின்ரேம். அவற்றுள் முக்கியமானது, விமானங் கட்டும்போது சிற்பிகளுக்கு உணவு கொடுத்து உதவிய ஒரு கிழவியின் விருப்பப்படி அவள் வீட்டிலிருந்த மிகப் பெரிய கல்லைப் பிரமாந்திரத் தளக்கல்லாகச் சாரம்பள்ளம் கிராமத்திலிருந்து சாரங்கட்டிக்

கோபுரத்திற்கு ஏற்றிச் சிகர நடுவில் அமைத்தது ஆகும். இதை மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

"அம்மையார் நிழலில் அமர்வோமென் றருள்செய்து
செம்மையார் வீற்றிருந்த திருத்தஞ்சை"

என்று பாடியிருக்கிறார்.

10. தஞ்சைப் பெரிய கோயிலில் அரிய சிற்பங்களும், அழகான சித்திரங்களும் பல உள்ளன. சிற்பங்களுள் மன்னன் இராசராசனுக்கு "நடராசத் தாண்டவம்" மிகப் பிடித்தமானது என்றும் அதன் காரணமாகத் தஞ்சைக்கோவிலின்விமானத்தைச் சுற்றிலும் இத்தாண்டவத்தின் பல தோற்றங்கள் செதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அன்றைய ஓவியங்களுள் "இராசராசனும் கருவூர்ச் சித்தரும்" ஒன்றாக இருக்கும் காட்சி சிறந்ததாகக் கருதப்படுகிறது. சோழ ஓவியங்களின் மீது நாயக்கர் காலத்தில் வர்ணம்பூசியதைச் சமீபத்தில்கண்டுபிடித்துப் பழைய ஓவியங்களைத் திரும்பப்பெற முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது. கோயிலில் பல இடங்களில் கல்வெட்டுக்கள், இராசராச சோழனதுவரலாற்றையும், அவனது ஆட்சி முறையையும், அவன் கோவிலுக்குக் கொடுத்த மானியங்களையும் தெளிவாக அறுதியிட்டுக் கூறுகின்றன. மானியங்களைப் பற்றிக் கல்வெட்டுக்களில் குறிக்கவேண்டுமென்று இராசராசனைக் கேட்டபோது, அவன் கூறிய மறுமொழி அம்மன்னனின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றது.

"நாம் குடுத்தனவும், நம் அக்கன் குடுத்தனவும்,
நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார்
குடுத்தனவும் வெட்டுக"

என்று அவன் சொன்னான். பிறர் செய்த நற்பணிக்குத் தான் பெருமைபெற முயலுவது சாதாரணமாகக் காணப்படும் மனித இயல்பு. அந்நிலையில் இந்த மாமன்னன் சொல்லும்செயலும் நமது பழந் தமிழரது உயர்ந்த பண்பு நிலைக்கு ஒப்பற்ற உரைகல்லாக

அமைகின்றது. தன்பெயர் விளங்கத் தஞ்சை இராசராசேசுரமும், தன்பட்டத்தரசிபெயரால் திருவையாற்று உலோகமாதேச்சரமும் அமைத்த. இராசராசன், ஈழத்து வெற்றிக்குப்பின் அங்கே பொலன்னறுவையில் தன் தாயாரின் நினைவாக வானவன் மாதேவீச்சரம் என்று ஒரு சிவாலயமும் அமைத்தான்.

11. இராசராச சோழன் சிவபக்தனாக இருந்தபோதிலும், வைணவச் சிற்பங்களையும், காவியங்களையும் ஆதரித்து வந்தான். இத்தகைய சிற்பங்கள் பல தஞ்சைப் பெரியகோயிலிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாகப்பட்டினத்திலே கடார மன்னன் விசயதுங்கன் விருப்பத்திற்கு இணங்க ஒருபுத்த விகாரம் எழுப்ப இவன் துணை நின்றான். இப்பள்ளிக்கு மானியமாக ஒரு கிராமத்தையே வழங்கியதாகவும் வரலாற்று ஏடுகள் கூறுகின்றன. மைசூர்ப் பகுதிகளிலே வைணவக் கோயில்களைக் கட்டுவித்தான். ஆகவே இம்மன்னன் மதவழிபாட்டிலே சமரச எண்ணமுடையவனாக இருந்தான் என்பது தெரிய வருகின்றது.

12. இறுதியாக, இராசராசன் பற்றிய பல வரலாறுகளிலிருந்து அவன் உலக மகா வீரர்களில் மிகச் சிறந்த மாவீரன் என்றும், அரசுக் கலையில் அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனவும், கல்வி கேள்விகளிலும், இறைவன் வழிபாட்டிலும், கலை ஆர்வத்திலும் அவன் மிக மேம்பாடு உடையவனாக இருந்தான் என்றும் முடிவு கட்டலாம். அவனது ஒப்பற்ற வெற்றிகள் இன்று ஏட்டளவில் மாத்திரம் நமக்குத் தெரிந்த போதிலும், அவன் கண்ட கலைக் கனவுகள் இன்றும் மாபெரும் கற்கோயில்களாகக் கம்பீரமாகக்காட்சியளிக்கின்றன. அதேபோல் அவனது சமயப்பற்றுத் தேவாரத் திருமுறைகளைக் கேட்குந்தோறும் தொனிக்கிறது தனது நாட்டின் பெருமைக்கும், தனது குடிகளின் நல்வாழ்விற்குமாகத் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துகொண்ட இம்மாமன்னனது சிறப்பு, இந்திய வரலாற்று ஏடுகளில் இதுவரை இடம்பெற்றது போதாது என்று நான் கருதுகிறேன். அவன் காலத்தில் நாடு செழித்தது; குடிகள் இன்புற்று வாழ்ந்தனர். அறம் ஓங்கிற்று. உலகமே அவனைப்

போற்றிற்று.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க, இம்மன்னன் 'வாழ்வாங்கு வாழ்ந்து' தன் மக்களுக்கு ஒரு பொற்காலத்தை ஈந்து தமிழக வரலாற்றில் அழியா இடம் பெற்றுச் சென்ருன் என்று சொன்னல் அது மிகையாகாது;

தமிழ் இலக்கண வளர்ச்சி

வை. தட்சிணாமூர்த்தி எம். ஏ.,
மதுரை.

இலக்கணம்

வாழ்வியற் கருத்துக்களை வெளியிடுதற்கு வெற்றுக் குரல்களாக மொழிமுதலில் தோன்றியது. அவ்வெற்றுக் குரல்கள் குறியீட்டு ஒலிகளாக மாறின. அவ்வொலிகளினின்று சொற் பொருள் நிலைதோன்றியது. பின்னரே அவ்வொலி வடிவங்கட்கேற்ப ஓவிய வரி வடிவங்களும், அவற்றினின்று முறையான எழுத்து முறைகளும் மலர்ந்தன. இன்றும் வரிவடிவமற்று வெறும் பேச்சு மொழிகளாகவே திகழும் மொழிகள் நாடுகள் தோறும் உள்ளன. இவையனைத்தும் வளரும் வாழ்வில் மக்கள்தம் உள்ளக் கிடக்கைகளை வெளிக் காட்டுதற்குக் கொண்ட வாய்ப்புக்களே. முதலில் பேச்சாக, கதையாக இசைநல்கு வாய் மொழித் தொடராக இலக்கியம் ஒலி வடிவில் தோன்றியது. செம்மை எழுத்து நிலை வளரும் நிலையில், அதே வாழ்வியல் நெளிவும் சுழிவும் கொண்டு வண்ணம் தீட்டப்பெற்ற இலக்கியங்களாக எழுத்துருப் பெற்றன: அனைவரும் ஒப்ப உணர்ந்து புரிந்து கொள்ளுமளவு அவ்வெழுத் தோவியங்களும், பேச்சோவியங்களும் நிலைத்திருக்க அமைப்புக் கட்டுப்பாடுகளான இலக்கணம் தோன்றியது. இலக்கிய வளர்ச்சியின் பயனாகவே இலக்கணம் தோன்றி, அவ்விலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ப நாள் தோறும் தானும் வளரும் இயல்பினதாயமைகின்றது. தமிழர் இலக்கணங்களை நூல் என்ற சொல்லால் மொழிவது வழக்கு. 'நூல்' என்ற சொல் இலக்கணங்களையே குறிக்கப் பயன்பட்டுள்ளது என்பதைத் தொல்காப்பிய உரைகளிற் காணலாம்.

தமிழ் மொழியில் இலக்கணம்

மூன்று சங்கங்கள் வைத்துத் தமிழினை வளர்த்த பெருமையும் மூவர் முதலாம் சிவபெருமான் அவர்கள் நம் தமிழ்

மொழியைத் தோற்றுவித்த சிறப்பும் புலவர் பெருமக்கள் பாடிப் பாடித் தூய்த்த நலன்கள். இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்ற சிந்துவெளிக் கண்டெடுப்புக்களில் தமிழ்ச்சாயல் தோன்றுகிறது. முதற் சங்கம் 4500 ஆண்டுகள் (?) கால அளவில், 89 மன்னர்களின் ஆட்சியில் இருந்ததாகவும், அது அழிதற்கான கடல்வெள்ளம் சற்றேறக் குறைய 9500 ஆண்டுகட்கு முன் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் நம் நாட்டு, மேல்நாட்டு அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். சங்கம் வைத்து இலக்கண—இலக்கிய மோதும் நிலை ஏற்படுத்துதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே தமிழ் இலக்கியங்கள் தோன்றி அவற்றிற்கு இலக்கணமும் செய்திருக்க வேண்டும்என்பது மேற்கண்டவற்றால் எளிதில் தெரியவருகிறது. ''எண்ணிறந்த ஆராய்ச்சிகட்கும் உடன்பாடு மறுப்புக்கட்கு மிடையே, தலைச்சங்க காலத்தில் ஆனுப் பெருமை அகத்தியன் என்னும் அருந்தவ முனிவன் ஆக்கிய 'அகத்தியம்' என்ற நூலே இலக்கணமாயமைந்துள்ளது'' என்ற கருத்து நிலவுகிறது. இன்று நமக்குக் கிடைச்கும் முதல் இலக்கணம் நல்லிசை பெற்ற தொல்காப்பியமே. தொல்காப்பியத்தைத் தொடர்ந்து இன்றைய மொழிநூல் ஆராய்ச்சியாளர் கொள்கை வரை இலக்கண முறையில் முறையான வளர்ச்சியினை நூல்களைப் படிப்போர் எளிதில் காணலாம். இனி இலக்கண நூல்களின் வரிசையினைக் காண்போம்.

அகத்தியம்

ஆதியில் மாதொருபாகனிடம் தமிழ் கற்றவர் அகத்தியர் எனவும் பிறவாகவும் அகத்தியனுரைப் பற்றிக் கூறப்படுவனவாய செய்திகள் மிகப்பல. தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய பேராசிரியர் அவர்கள் அகத்தியம் முச்சங்கத்தார்கட்கும் இலக்கணமாயமைந்து, பல புலவர்களாலும் பெரிதும் போற்றப்பட்ட முதல்நூல் எனத் துணிகிறார்கள். செய்யுள் இலக்கணம் அகத்தியத்துள் பரந்து கிடந்துள்ளது. மற்றும் பன்னிரு படலப் பாயிரத்திலும் அகத்தியம் பற்றிக் கூறப்படுகின்றது. புறப்பொருள் வெண்பாமாலை சிறப்புப்பாயிரத்தில் தென்மலை இருந்த சீர்சால் முனிவன்பால் தமிழைத் தொல்காப்பியரும் பிற பதி

ஞெருவரும் கற்றமை கூறப்படுகிறது. அகத்தியரின் மாணவரான பன்னிருவரும் நூல் இயற்றியதாகக் கூறப்படுகிறது. பன்னிரண்டாயிரம் சூத்திரங்களால் ஆய அகத்தியமாய இலக்கணத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல் என்பனவாய ஒன்பது பகுதிகள் இருந்தனவாகக் கூறப்படுகிறது. சோதிடம், சந்தருவம், கூத்து என்பனவும் அவற்றுள் கூறப்பட்டனவாம். பேராசிரியம், இளம்பூரணம், இலக்கண விளக்கம், நன்னூல் விருத்தி, வேதகிரி முதலியார் எழுதிய இலக்கணக் களஞ்சியம் ஆய உரைகளின்கண் அகத்தியம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

உரையிடை உரைக்கும் ஒழிந்த நன்னூல்கள்

அகத்தியம் போன்றே பண்டையன எனப் பகரப்படுகின்ற இலக்கணங்கள் பல காணக் கிடைக்காதனவாக உள. அவற்றின் செய்திகள் யாதும் நாமறிய இயலவில்லை. அகத்தியரின் மாணவர் பன்னிருவர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களை அன்றிப்பலர் இலக்கணங்கள் வகுத்துள்ளனர். பண்டை இலக்கணங்கட்கு நூல் என்ற பெயர் மட்டுமன்றிப் புராணம் என்ற பெயரும் அமைந்தமை உண்டு.

மாபுராணம், பூதபுராணம்

மாபுராணம், பூதபுராணம் என்னும் இரு இலக்கண நூல்களும் விரிவாக எழுதப்பட்டன என்பது பேராசிரியர்தம் மரபியல் உரையில் கூறப்படுகின்றது. யாப்பருங்கலவிருத்தியுள் மாபுராணச்சூத்திரங்கள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன. பூதபுராணம் அகத்தியர் காலத்தியது எனப்படுகின்றது.

அவிநயம்

யாப்பருங்கல விருத்தியில் அவிநயனர் எழுதிய "அவிநயம்" என்ற இலக்கண நூலின் பல சூத்திரங்கள் மேற்கோளாக வருகின்றன. இதற்குத் தண்டலங் கிழவனர் இராச

பவித்திரப் பல்லவதரையர் என்பார் உரை எழுதியுள்ளதாக நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் அவர்கள் உரைக்கின்ருர்கள். இது தொல்காப்பியத்துக்கு முந்தியது என டாக்டர் உ. வே. சா. அவர்கள் உரைக்கின்ருர்கள். இதில் யாப்பதிகாரம் என்ற பகுதி மிகவிரிவாக இருக்குமென்றும், அவ் யாப்பதிகாரத்துக்கு உறுப்பாக 'நாலடி நாற்பது' என்ற நூலொன்றும் இருந்ததென்றும் யாப்பருங்கல உரையினின்று அறிகிருேம். இதில் சூத்திரங்கள் வெண்பாக்களாலும் ஆக்கப் பட்டுள்ளன போலும். அவிநயனுர் அகத்தியரின் மாணவர் எனப்படுகிருர்.

பல்காப்பியம்

அகத்தியரின் மாணுக்கரும் தொல்காப்பியனுரோடு உடன் பயின்ருேருமாய பல்காப்பியனுர் தொல்காப்பியம் எழுந்த பின்னர் அதன் வழிநூலாகச் செய்யுள் இலக்கணத்தைமட்டும் 'பல்காப்பியம்' என்ற பெயரால் இயற்றியுள்ளார் என்பது பேராசிரியர் உரையால் போதருகின்றது. பல்காப்பியத்தின் புறநடைச்சூத்திரம் ஒன்றைப் பேராசிரியர் எடுத்தாண்டுள்ளார். பல்காப்பியத்தில் அகத்தியத்துள் பரந்து கிடந்த செய்யுள் இலக்கணம் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது.

பல்காயம்

தொல்காப்பியனுர் தோன்ற விரித்துரைத்தவற்றைப் பல்காயனுர்பகுத்துக் கூறியுள்ளார் என யாப்பருங்கல விருத்தியுள் கூறப்படுகின்றது. இதுவும் தொல்காப்பியத்தின் வழிநூலாக யாப்பைமட்டும் உறுப்பு உறுப்பாகப் பகுத்துக் கூறும் நூலாக நிற்கிறது. பல்காப்பியத்தில் முதற் சூத்திரத்தை யாப்பருங்கல விருத்தி தன்னகத்தே காட்டுகிறது.

காக்கை பாடினியம்

பல்காயனுர் தொல்காப்பியனுர் நவின்ற யாப்பிணைப் பகுத்துக் கூறினர். இவண் காக்கை பாடினியார் தொகுத்துக் கூறியுள்ளார் என அதே யாப்பருங்கல விருத்தி உரைகாரர்

உரைக்கின்றார். காக்கைபாடினியார் தொல்காப்பியரோடு ஒரு சாலை மாணவர் என நச்சினார்க்கினியர் நவில்வதை ஒப்ப இவரும் அகத்தியரின் மாணவர் என்பது புலனாகிறது. பேராசிரியர் கூற்றினின்று காக்கைபாடினியார் காலத்தில் குமரியாறு கடற்கோட்கு இறையாகவில்லை என்பதும் பெறப்படுகின்றது. யாப்பருங்கல விருத்தி ஆசிரியர் காக்கை பாடினியத்திலிருந்து பல சூத்திரங்களைமேற்கோளாகக் காட்டுகின்றார். தொல்காப்பியர் கூறாத தனி இலக்கணம், தாழிசை, துறை, விருத்தம் முதலிய பாவினங்களின் இலக்கணங்களை இவர் மொழிகிறார். இவரியற்றிய சூத்திரங்களுள் வடமொழிப் பயிற்சி கண்டு பிற்காலத்தவர் என்பாருமுளர். காக்கைபாடினியார் தனி இலக்கணம் செய்யவில்லை எனப் பேராசிரியர் கூறுகின்றார். யாப்பருங்கலம் எழுதிய அமிதசாகர முனிவர்தம் நூலுக்கு முதல் நூலாகக் கொண்டவற்றுள் காக்கை பாடினியமும் ஒன்று' 'கற்றார் மதிக்கும் கலைக் காக்கை பாடினியார்' எனப் பாராட்டப் படுவதால் இவர் தம் நுண்ணறிவும் சிறப்பும் புலனாகின்றன.

சிறு காக்கை பாடினியம்

சிறு காக்கை பாடினியார் என்பவர் யாப்பிலக்கண நூலாய சிறு காக்கை பாடினியதைப் பாடியுள்ளார். இவர் தொல்காப்பியருக்குப் பிற்பட்டவரென்றும், குமரியாறு கடல் கொண்டபின் தோன்றியவர் என்றும் பேராசிரியர் கூறுகின்றார். இந்நூலும் தொல்காப்பியத்தின் வழி நூலேயாம். இவர் பாவினங்கட்கு இலக்கணம் வகுத்துள்ளார். சூத்திரங்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் ஆளப்படுகின்றன. இவர் தொல்காப்பியரோடு சமகாலத்தவர் அல்லர்.

பிறயாப்பு நூல்கள்

கையனார் என்பவரால் இயற்றப்பட்ட, 'கையனார்யாப்பு' நத்தத்தனார் இயற்றிய 'நத்தத்தர்' யாப்பு, பெயர் அறியப்படாப் புலவர் ஒருவரால் இயற்றப்பட்ட ,சங்கயாப்பு' மயேச்சுரர் என்பவரால் இயற்றப் பட்ட மயேச்சுரர் யாப்பு போன்ற பல நூல்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் பயிலப்படுகின்றன. இவையன்றிப் பரிமாணனார், பனம் பாரனார், நல்லாறனார்,

வாய்ப்பியனார், கடியநன்னியார், பாடலனார் போன்றவர் இயற்றியனவும் யாப்பருங்கல விருத்தியில் கூறப்படுகின்றன. பெரிய பம்பம், கவிமயக்கறை, பெரியமுப்பழம், தக்காணியம் போன்ற பிற யாப்பு நூல்களும் இருந்தனவாகத் தெரியவருகின்றன.

நாமறியும் முதல் நூல்—தொல்காப்பியம்

தமிழ் இலக்கணத்தின் சிறப்பை உலகறியச் செய்யும் வண்ணம் இன்று நம் கைக்குக் கிடைக்கும் பேரிலக்கணம் தொல்காப்பியமே. அகத்தியம் கிடைக்கவில்லை. அதனை அடுத்துத் தொல்காப்பியமே கலங்கரை விளக்கமாய் நமக்குத் தமிழ் இலக்கிய இலக்கணப் பரப்புக்கு வழிகாட்டி வருகின்றது. பிற மொழியாளரிடத்து இல்லாத நிலையில் பொருள் இலக்கணத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்துவது தொல்காப்பியமே. எழுத்து, எழுத்தாலாய சொல், சொல்லாலாய பொருள், அப்பொருள் வடிக்கத்தகு யாப்பு, அதற்கான மரபு ஆய பல நிலைகளில் இலக்கியக்கலை முழுமைக்கும் வரம்புகட்டும் பெருமைக்கு வாய்ப்பு நல்குவதும் இதுவே. இன்றுவரை தொல்காப்பியத்தை விஞ்சும் இலக்கண நூல் காணக் கிடைக்கவில்லை. பாட்டுக்குரிய வாழ்வியற் பொருளை அகம், புறம் எனப் பிரித்துக் கூறினமையும் சொல்லை ஆளுகையில் வடமொழி ஆய பிறமொழிச் சொற்களை ஆளுதற் கேற்ற வழியமைத் தமையும், எழுத்துக்களின் பிறப்புக்களைக் கூறிப் பகுத்த முறையும் பிறவும் தமிழ் மொழியின் பெருமைக்குச் சான்றாக நின்று நிலவும் தொல்காப்பியத் தமிழ் முறைகளாகக் கிடக்கின்றன.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களைக் கொண்டு மொத்தம் 1612 சூத்திரங்களால் ஆயது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் உள்ளன. இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச்சிலையார் ஆகிய அறுவர் தொல்காப்பியத்துக்கு உரை எழுதியுள்ளார்கள். அண்மையில் நாவலர் பாரதியார் அவர்களும் ஒரு உரை எழுதியுள்ளார்கள். தொல்காப்பியர், அகத்தியரின் பன்னிரு மாணவருள் ஒருவர் எனக் கூறப்படுகின்றது. இவர்

தம் தொல்காப்பியத்தின் சிறப்புக் காரணமாக இதற்கு முன் இருந்த பிற இலக்கண நூல்கள் பெயர், ஊர் தெரியாத நிலை எய்தியதோடுமட்டுமன்றிப், பிற்கால நூல்களின் பெயர்களும் மங்கியதுண்டு. தொல்காப்பியமே இடை, கடைச் சங்கங்கட்கு இலக்கணம் என்பர். தொல்காப்பியம் முதல் நூலன்று, அகத்தியத்தின் வழிநூலே என்பது துணிபு. தொல்காப்பியத்தின் பொருட் பகுப்புமுறை உலக இலக்கணங்கள் காணுத ஒன்று. வழி, வழி வந்த நெறிநின்று வளர்ச்சிக்கு வித்தூன்றிய முறையில் இலக்கணமுறை அமைக்கப் பட்டுள்ளது. இன்று வரை தொல்காப்பியத்தைத் தழுவியே இலக்கண நூல்கள் செல்லுகின்றன எனின் அதன் பெருமையைக் கூறலும் வேண்டுமோ? வடமொழி இலக்கணமாய்ப் பாணினீயம் தோன்றற்கு முன்னரே தோன்றிப் பெருமை எய்திய தொல்காப்பியத்தின் பெருமையே இன்றைய தமிழின் பெருமைஎனின் மிகையாகாது.

பன்னிரு படலம்:

அகத்தியரின் பன்னிரு மாணவரும் இணைந்தியற்றிய நூல் பன்னிரு படலம். இதில் பன்னிரண்டு படலப் பகுப்புகள் உண்டென்பது பெயராலேயே விளங்கும். பன்னிரு படலப் பாயிரச் செய்யுளில் அகத்தியரைப் 'பொருந்தப் புரை இன்றி உணர்ந்த பெருமையுடையவர்' என்று பாராட்டப் பட்டுள்ளது.

இறையனுர் அகப்பொருள்

கண்ணுதற் கடவுளே சங்கப் புலவருள் ஒருவராக இருந்து, அகப்பொருள் இலக்கணத்தை இயற்றினுர் என்பர். அன்றியும் இறைவனது திருவடிக் கீழ்க் கிடந்த அகப்பொருள் இலக்கணம் எனவும் கூறுவது உண்டு இவ்விலக்கணம் களவியல், கற்பியல் என்னும் இரு இயல்களை உடையதாய் உள்ளது. இதன்கண் களவியலின் சிறப்பு நோக்கிக் 'களவியல்' என்றும் அழைப்பது உண்டு இந்நூல் எழுந்த வரலாறு, இதற்கு உரை எழுந்த வரலாறு போன்றன பற்றிப் பல வகையான கதைகள் வழங்குகின்றன. அதற்கு எழுந்த பலவுரைகளில் நக்கீரர் பெருமான் உரையே சிறந்ததென முருகக்கடவுள்

உருத்திர சன்மன் என்பான் உருவில் அமர்ந்து கேட்டு முடிவுரைத்ததாகவும், பிறவுமாகவும் கூறப்பட்டுள்ளன. இப்பொழுது வழங்குவது இவ்வுரையே யாகும். இவ்வுரையில் பிற்காலக் கோவை நூல்கள் கையாளப்படுவதால் பிற்காலத்தியதெனக் கூறுதல் உண்டு. முதலில் நக்கீரர் பெருமானுல் எழுதப்பட்ட உரை நான்கு தலைமுறைக்காலம் ஓதப்பட்டுப் பின்னர் எழுத்து வடிவமாக்கப்பட்டமையால் இவ்வாறு பிற்காலக் கோவை நூல் எடுத்துக் காட்டுக்கள் சேர்ந்துள என்பர். இதன்கண் பல வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன. இதன் கண் உள்ள அறுபது சூத்திரங்களும் சிறப்புடையன என்பர்.

பிற்கால இலக்கணங்கள்:

புறப்பொருள் வெண்பாமாலை

ஐயனரிதனர் என்னும் புலவர் வெண்பா யாப்பால் புறப்பொருளை இந்நூலில் விரிக்கின்ருர். தொல்காப்பியரோடு இவர் சற்று வேறுபடுகிருர். இது பன்னிருபடலத்தின் வழிநூலாகும். சாமுண்டி தேவநாயகர் என்பவர் இதற்கு உரை எழுதியுள்ளார். 361 வெண்பாக்களைக் கொண்டது இந் நூல். பன்னிரண்டு படலங்களில் புறப் பொருள் விரிக்கப்படுகின்றது. இந் நூலில் வெண்பாக்கட்கு ஏற்ப கொளுச் செய்யுட்கள் உள. இறுதி மூன்று படலங்களில்காணும் வெண்பாக்களினின்று பழந்தமிழ்நாட்டின் வரலாறுகளை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் சிறப்புப் பகுப்புக்களாய அகம், புறம், என்பவற்றுள் புறத்தை மட்டும் கூறுவது இது.

நம்பியகப்பொருள்

நாற்கவிராச நம்பி என்பார் தொல்காப்பியர் அருளிய ஒல்காப் பொருளில் அகத்தை மட்டும் திரட்டி 252 சூத்திரங்களிளுைய அகப்பொருளிலக்கணம் ஆக்கினர். இந்நூலில் எடுத்துக் காட்டுச் செய்யுள்களாகப் பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தஞ்சை வாணன் கோவைப் பாடல்கள் காட்டப் பெறுகின்றன. யாழ்ப்பாணத்துப் பண்டித வைத்திலிங்கம் பிள்ளை அவர்கள் உரை எழுதியுள்ளார்கள். நாற்கவிராச நமபியார் சமண சமயத்தவர்கள்.

யாப்பருங்கலம் — காரிகை

இதுகாறும் நாம் காண்பவற்றுள் யாப்பு மரபை வரையறுத்துக் கூறும் நூல்களுள் சிறந்தது அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலம். யாப்பருங்கலத்துக்குப் பழைய விருத்தியுரை ஒன்றுண்டு. அதில் இறந்தொழிந்த இலக்கணச் சூத்திரங்களும் எடுத்துக் காட்டுச் செய்யுள்களும் விரவிக் கிடக்கின்றன. இதனல் பழந்தமிழ் நூல்கள் பலவற்றின் பெயர்களும், தமிழின் விரிவும் அறியக் கிடக்கின்றன. தொல்காப்பியத்தைவிடச் சில மாறுதல்களையும் இதில் காணலாம். 95 சூத்திரங்களில் இந்நூல் அடங்குகிறது. இந் நூலுக்கு அங்கமாகவே யாப்பருங்கலக் காரிகை என்ற நூலும் அவராலேயே எழுதப்பட்டுள்ளது. இது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆய மூன்று இயல்களை உடையது. காரிகையில் நூறு வண்ணங்கள், தூங்கிசை, ஏந்திசை. அடுக்கிசை, பிரிதல் இசை, மயங்கிசை போன்ற ஐந்து பகுப்புக்களாக விளக்கப்பட்டுள்ளன. குணசாகரர் காரிகைக்கு உரை எழுதியுள்ளார். இவர்களிருவரும் சமணர்என்பர். யாப்பருங்கலத்தை விட யாப்பருங்கலக் காரிகை உயர்ந்தது என நாட்டாரவர்கள் மொழிவார்கள்.

வீரசோழியம்

புத்தமித்திரர் எனப்படும் பௌத்தரால் இயற்றப்பட்ட ஐந்திலக்கணமும் கூறும் நூல் வீரசோழியம். 181 சூத்திரங்களை உடைய இந்நூலுக்குப் புலவர் தன்னைக் காத்துப் போற்றிய பொன் பொத்தியூர் இராச வீரசோழனின் பெயரையே இட்டுள்ளார். வடநூன் முடிபை உடன்பட்டு இவர் இலக்கணம் வகுத்துள்ளார். திகடசக்கரம் எனத் திருப்புகழில் வரும் புணர்ப்புக்கு இதில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இவர் முந்து நூலோர் கண்ட முடிவுகளிற் சிறிது வேறுபடுகிறுர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆய ஐந்திலக்கணங்களும் இதில் கூறப்பட்டுள்ளன. இதற்குப் பெருந்தேவனுர் என்னும் பிற்காலத்தவர் உரை எழுதியுள்ளார். ஐந்திலக்கணங்களையும் வகுத்தோதிய முதல் சிறு நூல் இதுவே. இதில் வரும் அலங்காரப்படலம் 'காவ்யதாசம்' என்னும் வடமொழி நூலை தழுவி எழுதப்பட்டது.

நேமிநாதம்

அருகப்பெருமானின் திருப்பெயரால் குணவீரபண்டிதர் என்னும் சமணர் இயற்றிய இலக்கண நூல் நேமிநாதம். இது சின்னூல் எனவும் வழங்கப்பெறும். எழுத்து, சொல் இரண்டிலக்கணமும் தொண்ணூற்றாறு சூத்திரங்களில் கூறப்படுகின்றன.

நன்னூல்

தொல்காப்பியத்தை அடுத்து இன்றுவரை பொன்னே போற் போற்றப்பட்டுக் கடைப்பிடிக்கப்படும் இயல்தமிழ் இலக்கண நூல் நன்னூலேயாகும். எழுத்தையும், சொல்லையும் பழையன கழித்துப் புதியன புகுத்தி இரண்டே அதிகாரங்களில் மொழிகின்றார் பவணந்திமுனிவர் என்னும் சமணத்துறவியாரே இதன் ஆசிரியர். நூல்பகுப்பு முறை கூறி, விளக்க வேண்டியவற்றை மிகச் சுருக்கமாகக் கூறுவதில் நூலாசிரியர் வெற்றி கண்டுள்ளார். தொல்காப்பியர் ஒன்பது இயல்களில் கூறிய எழுத்தை ஐந்தே இயல்களிலும், சொல்லை நான்கே இயல்களிலும் கூறுகின்றார். 462 சூத்திரங்களையும், ஒன்பது இயல்களையும் கொண்டது இந்நூல். நூலின் சிறப்புத்தன்மையால் நன்னூல் எனப் பெயர் பெற்றுள்ளது. ஏழு தொல்காப்பியச் சூத்திரங்களை ஆசிரியர் சிதைக்காது நூலின்கண் ஆண்டுள்ளார். இவருடைய கருத்துக்கள் இளம்பூரணரை ஒப்பிச் செல்வன. இலக்கண விளக்க ஆசிரியர் மிகுதியான நன்னூற் சூத்திரங்களைத் தனது நூலிற் கையாள்கிறார். தொல்காப்பியத்திற் காணப்படாத சங்க மரபுகள் பலவற்றை நன்னூலார் மொழிவதோடு, சிற்சிலவிடங்களில் தொல்காப்பியரோடு மாறுபட்டும் கூறுகிறார். நன்னூலார் ஐந்திலக்கணமும் மொழிந்தார். பிற கிடைத்தில என்பாரும் உளர். இதற்குக் காண்டிகையுரையை மயிலைநாதரும், விருத்தியுரையைச் சங்கரநமச்சிவாயரும் செய்துள்ளனர்.

குட்டித் தொல்காப்பியம்

கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் திருவாரூர் வைத்தியநாதநாவலர் என்னும் வைத்தியநாத தேசிகர் இயற்றிய ஐந்திலக்கணமும் பாட்டியலும் கூறும் நூல் இலக்கண விளக்கம் என்

பது. இதனைக் குட்டித் தொல்காப்பியம் என் மொழிவதும் உண்டு. இவர்கள் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தவர்கள். தொல்காப்பிய, நன்னூற் சூத்திரங்கள் இந்நூலில் ஆளப்பட்டுள்ளன. தொல்காப்பிய விதிகள் எளிதில் விளங்கும்வண்ணம் செய்யப்பட்டுள்ளமையால்தான் குட்டித் தொல்காப்பியம் எனப்பட்டது. சிவஞான முனிவர் சுவாமிகள் இந்நூலுக்கு மறுப்புக் கூறுமுறையான் 'இலக்கண விளக்கச் சூறுவளி' என்னும் நூலை இயற்றியுள்ளார்கள். இலக்கண விளக்க ஆசிரியர் தண்டிஅலங்காரத்தை ஒட்டியே அணிகளை மொழிவார்.

இலக்கணக் கொத்து

திருவாவடுதுறைத் திருமடத்தைச் சார்ந்த ஈசான தேசிகர் என்னும் சுவாமிநாத தேசிகர் அவர்கள் இலக்கணக்கொத்து என்னும் இலக்கண நூலை இயற்றியுள்ளார்கள். வேற்றுமை, வினை, ஒழிபு என்ற மூன்று பகுதிகளை 151 சூத்திரங்களில் இந்நூல் கூறுகிறது. இந்நூலில் "ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று அறையவே நாணுவர் அறிவுடையோரே" என்று தமிழ் மொழியினை இகழ்வாகக் குறிப்பிட்டு உள்ளார். இலக்கண விளக்க ஆசிரியரின் பாராட்டைப் பெற்றவர் இவர். இவரது நூல்கள் தமிழ் — வடமொழி இரண்டினையும் பொது நிலையிற் காண்பன.

தமிழ் நெறி விளக்கம்

ஐந்திலக்கணமும் உடைய தமிழ் நெறிவிளக்கம் என்னும் நூலின் பொருளியல் மட்டும் கிடைத்துள்ளது. இதன் கண் யாப்பிலக்கணமும் கூறப்பட்டுள்ளது எனப் பெரியோர் எண்ணுவர்.

தொன்னூல்

மதுரைச் சுப்பிரதீபக் கவிராயரின் மாணவரான வீரமாமுனிவர் என்னும் கிறித்தவப் பாதிரியார் தொன்னூல் விளக்கம் என்னும் 307 சூத்திரங்களையுடைய இலக்கண நூலை எழுதியுள்ளார். ஐந்திலக்கண நூலாய இதில் செய்யுளியல், அணியியல் என்னும் தனிப் பிரிவுகள் உள. தண்டியலங்காரத்தை ஒட்டியே

இவரும் அணியிலக்கணம் மொழிவார். இப்பொழுதிருக்கும் கால் இழுக்கும் வடிவையும், சுழிக்கும் முறையையும் புகுத்தியவர் இவரே. இவருக்கு முன்னர் எகர ஒகரக் குறில்கட்கு மேல் புள்ளி வைத்து எழுதும் முறை இருந்தது. அம் முறையைத் தவிர்த்தவரும் இவரே. இது தமிழ் எழுத்துமுறையில் தொன்னூல் விளக்கம் புகுத்திய புதுமைகளுள் சிறப்பானது. 307 சூத்திரங்களால் ஆய தொன்னூல் விளக்கத்தில் 38 நன்னூற் சூத்திரங்களும், ஆறு நம்பியகப் பொருள் சூத்திரங்களும் ஆளப்பட்டுள்ளன.

முத்துவீரியம்

முத்துவீரப் புலவர் என்பவரால் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூலே முத்து வீரியம். இதன்கண் யாப்பும் அணியும் தனியே கூறப்படுகின்றன 1283 சூத்திரங்களால் ஆயது இந்நூல்.

அணியிலக்கணங்கள்

தொல்காப்பியர் காலத்தில் அணிகள் அமைப்பதற்கான வித்துக்கள் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் வடமொழி மரபு தழுவி அணியிலக்கணங்கள் பலவாகப் பல்கியுள்ளன. மேலே எழுத்து சொல், பொருள் ஆயவற்றை அடக்கிய இலக்கண நூல்களைக் கண்டோம். இனி அணி இலக்கணங்களைத் தனியே காண்போம். யாப்பின் வளர்ந்த வளர்ச்சியே அணி,

உரையிடைக்கண்டவை-அணியியல்

யாப்பருங்கல விருத்தியுரையிலும், நேமிநாத உரையிலும் அணியியல் என்ற பெயர் கூறப்பட்டுச் சில எடுத்துக் காட்டுச் சூத்திரங்கள் உள. அவ்வெடுத்துக் காட்டுச் சூத்திரங்களின் கருத்துக்களைத் தண்டியலங்காரத்தில் காண்கின்றோமே யன்றி அதே சூத்திரங்களைக் காணோம். அடியார்க்கு நல்லார் உரையிலும் அவ்வெடுத்துக்காட்டுக்கள் வருகின்றன. அவை வழக்கிழந்த அணியியல் என்னும் நூலினவே என்பது அறிஞர் முடிபு அச்சூத்திரங்களில் இயற்றமிழ் நான்கு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன அணிகள் 27 வகைகளாகப் பகுக்கப்பட்டுள்

ளன். காப்பிய இலக்கணத்தோடு, இருது வர்ணனை (பருவ வருணனை) யும் கூறப்பட்டுள்ளது.

இதுவேயன்றிப் பிறிதொரு நூலையும் அதன் மூன்று சூத்திரங்களையும் பேராசிரியர் தன் உரையில் பயில்கிறார். மூன்று குற்றங்களையுடையது எனப் பேராசிரியரால் பாராட்டப்படுகின்ற ஒரு பெயர் தெரியாத அணியிலக்கணம் ஒன்றும் இருந்துள்ளது என்று தெரிய வருகின்றது,

கிடைக்கும் அணியிலக்கணங்கள்:

தண்டியலங்காரம்

காவிய தர்சம் என்னும் வடமொழி நூலின் வழி நூலாகத் தண்டியலங்காரம் தமிழில் இயற்றப்பட்டுள்ளது. மூல நூலின் ஆசிரியரின் பெயரையே நூலின் பெயராக இடப்பட்டுள்ளதே அன்றி இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இத் தமிழ் நூலாசிரியர் சோழ நாட்டு அம்பிகாபதி என்பவருடைய குமாரராகலாம் எனக் கருதுவோரும் உண்டு.

வடமொழியும், தமிழ் மொழியும் பயின்ற ஆசிரியரால் இயற்றப்பட்ட இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் மூல நூலின் பெயர் குறிப்பிடப்படவில்லை. தண்டியலங்காரத்துக்குள்ள பழைய உரையில் உள்ள எடுத்துக்காட்டுப் பாடல்கள் தண்டியாசிரியராலேயே எழுதப்பட்டன என்பது அறியக்கிடக்கின்றன. அணியதிகாரம் என்ற பெயரும் இந்நூலுக்கு இருந்திருக்கிறது. 123 சூத்திரங்களை அடக்கிய இந்நூலே இன்றுவரை நம் பாராட்டுக்குரிய தமிழ் அணியிலக்கண நூலாக இருந்துவருகின்றது.

மாறனலங்காரம்

தொல்காப்பிய நெறியில், இலக்கியம் ஓர்ந்து தண்டியாசிரியர் கூறியதற்கு மேல் புதிய அணிகளை அமைத்து, ஆழ்வார் திருநகரி திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவர் இயற்றியது மாறனலங்காரம். நம்மாழ்வாரைப் புகழ்ந்து கூறும் எடுத்துக்காட்டுச் செய்யுட்களை அமைத்து இவர் நூல்இயற்றியுள்ளார். இந்நூலாசிரியர் ஆழ்வாரின் ஆத்தான கவியாகலின் நம்மாழ்வா

ரின் பெயரான மாறன் என்பதை வைத்தே நூற்பெயராக்கினர். திருப்பேரைக் கவிரத்னக் கவிராயர் என்பவர் இதற்கு உரை இயற்றியுள்ளார்.

மேற்கண்ட நூல்களன்றி, நால்வருள் ஒருவரல்லாத பிறிதொரு மாணிக்கவாசகர் என்பவரால் இயற்றப்பட்ட வடமொழி குவலயானந்தத்தின் மொழி பெயர்ப்பான தமிழ்க் குவலயானந்தம் என்னும் அணியிலக்கணம் ஒன்றும், விசாகப் பெருமாள் ஐயர் என்பவரால் இயற்றப்பட்ட அணியிலக்கண வினு, விடை என்ற நூலும், இராமநாதபுரம் முத்துசாமி ஐயங்கார் அவர்களால் இயற்றப்பட்ட சந்திரலோக அலங்காரத் தொகைச் செய்யுள் என்ற நூலும், சீனிவாசராகவாச்சாரியார் இயற்றிய தண்டியலங்கார சாரம் என்ற உரைநடை நூலும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. களவியற் காரிகை உரையில் கண்டனலங்காரம் என்னும் பழைய நூலொன்றும் காட்டப்படுகின்றது.

பாட்டியல் நூல்கள்

யாப்புக்கும், அணிக்கும் பிறகு பாட்டின் இலக்கணங்களைப் பயிலும் பாட்டியல் நூல்கள் ஆராயத்தக்கன. பெரும்பான்மையும் பாட்டியல்களின் தசப்பொருத்தங்களும் செய்யுள் இலக்கணங்களும் பிரபந்தங்களின் இலக்கணங்களும் கூறுவனவே பாட்டியல் நூல்கள்.

பன்னிரு பாட்டியல்

பன்னிரு பாட்டியல் என்பது இப்பொழுது கிடைக்கும் பாட்டியல் நூல்களிற் பழமையானது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் போன்றவரால் அகத்தியர் போன்றவரின் ஆக்கத்தின் தொகுப்பு அது என்பர். பன்னிரு பாட்டியலில் 358 சூத்திரங்கள் உள. அவை பல ஆசிரியர்களால் இயற்றப்பட்டவை. இதன் பெயரில் 'பன்னிரு' என வருவதன் காரணம் தெரியவில்லை. இதில் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என மூன்று இயல்கள் உள.

வச்சணந்திமாலை

குணவீரபண்டிதர் என்பார் தமது ஆசிரியராய வச்சணந்தி என்பாரின் பெயரால் இயற்றியது வச்சணந்திமாலை.

இதனை வெண்பாப் பாட்டியல் என அழைப்பதும் உண்டு. 96சூத்திரங்களில் மங்கலம், சொல், பால், வர்ணம், உண்டி, தானம், அச்சம், நாள், கதை, கனம் முதலிய பொருத்தங்களைக் கூறுகின்றது இந்நூல்.

நவநீதப் பாட்டியல்

நவநீதப் பாட்டியல் என்பது நவநீத நாடனூர் என்பவரால் இயற்றப்பட்டது. இதில் காப்பியங்களைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை:

இலக்கண விளக்கப் பாட்டியல்

வச்சணந்திமாலையைப் பின்பற்றிச் சில புதிய பிரபந்தங்களின் இலக்கணங்களையும் இலக்கண விளக்கப் பாட்டியல் என்னும் நூல் கூறுகின்றது.

சிதம்பரப் பாட்டியல்

புராணத் திருமலைநாதர் என்பவரின் குமாரரான பரஞ்சோதிஎன்பவரால் இயற்றப்பட்டது இந்நூல். இது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என்ற ஐந்து பிரிவுகளைக்கொண்டுள்ளது. முதல் மூன்று இயல்களும் யாப்பருங்கலக்காரிகையை ஒட்டியும் பின் இரண்டியல்களும் வச்சணந்திமாலையை ஒட்டியும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூன்று இயல்கட்கும் ஓர் உரை கிடைக்கிறது.

இவையேயன்றி வாருணப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், தத்தாத்திமரயப்பாட்டியல் எனப் பல பாட்டியல் நூல்களும் நமக்குக் கிடைக்கின்றன. மற்றும் 96 வகை பிரபந்தங்களின் இலக்கணங்களைக் கூறும், பிரபந்தத் திரட்டு என்ற ஒரு நூலும், பிரபந்த தீபம் என்னும் நூலொன்றும் கிடைக்கின்றது.

இசை, நாடக இலக்கணங்கள்

மேற்கண்டவையேயன்றி இசை, நாடகத் தமிழ் இலக்கணங்களாக அடியார்க்குநல்லார் அவர்கள் தம் சிலப்பதிகார உரையிலும், உ. வே. சா. அவர்களின் குறிப்புகளிலும் பரதசேனபதீயம், சயந்தம், முறுவல், குணநூல், இந்திர காளி

யம், பஞ்சமரபு, வெண்டாளி, சுத்தானந்த பிரகாசம், மதிவாணர் நாடகத் தமிழ், இசை நுணுக்கம், சிகண்டி, சச்சபுட வெண்பா, தாளசமுத்திரம், கூத்த நூல் முதலிய இசை நாடக இலக்கண நூல்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

இலக்கண வளர்ச்சி

தொல்காப்பியந் தொட்டு இன்றுவரை தமிழ் இலக்கணத்தில் பல முறையான வளர்ச்சிகளைக் காண்கிறோம். தொல்காப்பியத்து உரை ஆசிரியர்கள் தத்தம் காலத்திற்கேற்ப ஒருவருக்கொருவர் மாறுபட்டு உரை எழுதிச் செல்வதே இலக்கணம் காலந்தோறும் வளர்ந்துள்ள வரலாற்றுக்குச் சான்றாகும். நன்னூலுக்கும், தொல்காப்பியத்துக்கும் உள்ள வேற்றுமைகளைப் பெரும் புலவர் க. வெள்ளை வாரணனார் அவர்கள் எழுதியுள்ளார்கள். அது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. தொல்காப்பியம், நன்னூல், தொன்னூல் ஆய மூன்றினும் தமிழ் எழுத்து முறையிற் கண்ட முறையான வளர்ச்சியைக் காணலாம். யாப்பு முறையில் தோன்றிய வளர்ச்சிகளும், புகுந்த புதுமைகளும் எண்ணிறந்த நூல்களாகக்காணக் கிடக்கின்றன. டாக்டர். அ. சிதம்பரநாதனார் அவர்கள் பாவின் வளர்ச்சி பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார்கள். மற்றும் சோமவந்தான் அரசன் சண்முகனார், திருமயிலை சண்முகம் பிள்ளை, சோமசுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளை போன்ற பெரியோர்களும், P. S. சுப்பிரமணிய சாத்திரியவர்களும பல இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்கள்.

பிறமுயற்சிகள்

இடைக்காலத்துத் தோன்றிய நிகண்டுகள், அண்மையில் தோன்றிய அகராதிகள், இலக்கண நூல்களின் பதிப்புக்களின் அடியே எழுதப்படும் அடிக் குறிப்புக்கள் போன்றனவும் இலக்கணப் பயிற்சிக்கும், வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன. சிதம்பரம் பூவராகம் பிள்ளை அவர்களின் சேனாவரையக் குறிப்புரையும், யாழ்ப்பாணத்துக் கணபதி ஐயர் அவர்களின் எழுத்ததிகாரக் குறிப்பும் மிகவும் பயன்படுவன. அண்மையில் "எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதிடவும் வேண்டும்; இலக்கண நூல் அதற்

கேற்ப அமைந்திடவும் வேண்டும்" என்னும் முயற்சி யொன்று எழுந்துள்ளது. மொழி நூல் துறையினர் மக்கள் வழக்கியலுக் கேற்ப மொழிப்பண்புகளைப் பகுத்தும் வகுத்தும் காண்கின்றனர். அதன் பயனாய் ஏதும் இலக்கணங்களில் மாற்றம் எழலாம்.

பிற்காலத்து, சாமிநாதம், சந்திரா லோகம், குவலயானந்தம், பிரபந்த தீபிகை போன்ற இலக்கண நூல்கள் சில எழுந்தன. யாப்பருங்கல உரை போன்ற உரைகளில் அவிநயப்புறநடை, கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரம், கவிமயக்கறை, குறு வேட்டுவச் செய்யுள், சங்கயாப்பு, செய்யுள் வகைமை, தக்கா ணியம், தாத்தாத்திரேயப் பாட்டியல், நக்கீரர் அடிநூல், நக்கீரர் நாலடி நானூறு, நத்தத்தம், நல்லாறன் மொழி வரி, பண்டாரப் பாட்டியல், பரிமாணனார், வாருணப் பாட்டியல் போன்ற இலக்கண நூல்கள் பற்றிச் செய்திகள் காணக் கிடைக் கின்றன. பரிதிமாற்கலைஞர் நாடகவியல் என்ற நாடக இலக்க ணம் எழுதியுள்ளார்.

பிறமொழியாளர் இயற்றிய தமிழ் இலக்கணங்கள்

மேலை நாடுகளோடு தமிழகம் தொடர்பு கொண்டிருந்ததன் பயனாகப் பிற்காலத்தில் மொழித்துறையில் நடைபெற்றிருக்கும் கொடுக்கல் வாங்கல் மிகுதியானது என்பதை நாமறிவோம். மேனாட்டினர் பலர் தமிழ் இலக்கண நூல்கள்கூட எழுதியுள் ளனர். பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் தமிழ் மொழி வரலாறு என்ற ஆங்கில நூலில் அவற்றைச் சுட்டியுள்ளார்கள். போர்த்துகீசிய மொழியில் ஒரு தமிழ் இலக்கணம் எழுதப்பட்டி ருக்கிறது. அது நம் நாட்டிற்கு வரவில்லை பால்டியஸ் (Baldaeus) என்ற டச்சுக்காரர் இந்தியாவைப்பற்றி எழுதிய நூலொன்றில் தமிழ் மொழியைப் பற்றி ஒரு கட்டுரை வரைந்துள்ளார். இக்கட்டுரையின் மொழி பெயர்ப்பு தக்கணக் கல்லூரியின் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. கி பி. 1680-இல் கோஸ்டா பால்த்ச்ரா (Costa Balthsara) என்ற அறிஞர் இலத்தீன் மொழி யில் ஒரு தமிழ் இலக்கணம் எழுதியுள்ளார். கி. பி. 1685-இல் P. புருனோ என்ற செக் நாட்டறிஞர், எழுதிய தமிழ் இலக்கணம் வெளியிடப்படாமலிருந்திருக்கிறது. பதினெட்டாம் நூற்

ருண்டில் தரங்கம்பாடி மிசனைச் சேர்ந்த சிகன்பால்கு அவர்கள் இலத்தீன் மொழியில் ஒரு தமிழ் இலக்கணத்தை எழுதினர். வீரமாமுனிவர் தமிழ் எழுத்து முறையில் கொண்டு வந்த சீர்திருத்தமும் தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலையும் பிற உரை நடை நூல்களையும் எழுதியமை பாராட்டப்பெற்ற ஒன்ருகும். கால்டுவெல் அடிகளாரின் திரவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் மொழியாராய்ச்சிக்குச் செய்துள்ள அடிப் படைத் தொண்டு அளவிடற்கரிது.

முடிவுரை

இதுகாறும் இலக்கண வளர்ச்சியைப் பகுத்துத் தொகுத்துக் கண்டோம். இற்றை நிலையில் இலக்கணத்தை மாணவரும், மறுமலர்ச்சி எழுத்தாளரும் விளக்கெண்ணெய் போன்று கசந்து காணும் நிலை ஏற்பட்டு விட்டது. ஆங்கிலப் பயிற்சி காரணமாகத் தமிழ் இலக்கணப் பயிற்சியைக் கைவிட்டு விட்ட காரணமே இதற்கு வித்து. இலக்கணம் விருப்போடு பயில்வோர்க்கு எளிது என்பதை முயன்று காணவேண்டும்.

எழுத்துலகில் சில மாற்றங்கள்!

—(-)—

பேராசிரியர். மு உலகநாதன்,

செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

எழுத்துலகில் சில மாற்றங்கள் என்னும் இக்கட்டுரை தமிழுலகில் ஒரு மாற்றத்தை—அல்லது சீற்றத்தை ஏற்படுத்தும் என்று கருதுகின்றேன். மாற்றத்தை விரும்புகின்றேன். சீற்றத்தை வரவேற்கின்றேன். காரண காரியத்தோடு கருத்துக்கள் மறுக்கப்படுமானால் அவர்களுக்கு நன்றி செலுத்துவேன்.

எழுத்துலகில் சில மாற்றங்கள் தேவைதானா? என்னும் கேள்விக்கு ஆம்! என்பதே என் பதில். இப்போது இந்த மாற்றத்திற்குக் காரணமென்ன? என்று கேட்டால் அதில் பயனுண்டு. பலனுண்டு. அதை நலனுண்டவரே அறிவர்.

எழுத்தைப் பொறுத்த மட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த வரிவடிவம் எத்தனையோ மாற்றங்களைப் பெற்றிருக்கிறது. உதாரணமாக, 'ஐ' என்ற எழுத்தை 'அய்' என்று எழுதலாம். 'ஔ' என்பதை 'அவ்' என்று எழுதலாம். தொல்காப்பியமே இதனை ஏற்றுக்கொள்கிறது.

எ; ஒ; என்னும் குற்றெழுத்துக்களின் நெடுமை எ, ஒ, என்று மேலே புள்ளி நீங்கியது. வீரமாமுனிவரின்* உதவியால் புள்ளி நீக்கப்பெற்றுக் கீழே சற்று இழுத்துவிடப்பட்டு ஏ, ஓ

* இவை வீரமாமுனிவர் (Rev. Beschi) செய்த மாறுதல்கள். "I also state I have devised another and easier way of distinguishing e and o long from e and o short" Rev. Beschi. A Grammar of the common Dialect of the Tamil Language P. 7.

என்று நீட்டம் பெற்றது. அவ்வரிவடிவம் விலக்கப்படவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உயிர் மெய் யெழுத்துக்களில் நெடுமையைக் குறிக்கப் பக்கத்தில் இடப்பட்ட புள்ளி (க.) முற்றுப்புள்ளிக்கும் அதற்கும் வேறுபாடு காணமுடியாமையால் (கா) என்று காலாகப் புள்ளி மாற்றம் பெற்றது. அதனையும் ஏற்றுக்கொண்டோம்.

'குற்றியலுகரமும் அற்றென மொழிப' எனப் புள்ளி பெற்ற தொல்காப்பியர் காலக் குற்றியலுகரக் குற்றியலிகரங்கள் மற்ற உகர இகரங்களைப் போலவே எழுதப்பட்டன. இம்மாற்றமும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ம என்பது ப் (ப்) என்ற வடிவாகப் பகரத்தின் உள்ளும் ஒரு புள்ளி பெற்று எழுதப்பட்டது. (இது பகர மகர வரி வடிவ வேறுபாடு கூறுவதா அல்லது மகரக் குறுக்கத்தைக் கூறுவதா என்ற கருத்து வேறுபாடு உணர்த்துவதும் உண்டு)

ம என்பதும் உள்ளாற் புள்ளி (ம்) பெற்று நிற்பினும் அதுவும் வரிவடிவ வேறுபாடே. அதுவும் தொல்காப்பியரால் கூறப்பட்டு இப்போது வழக்கொழிந்தது எனின் அதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனை "உருபு திரிந்து உயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம். கி. கீ முதலியன மேல் விலங்கு பெற்றன, கு. கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன. கா; ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர். கொ, கோ, ஙொ, ஙோ, முதலியன புள்ளியும் கோடும் உடன் பெற்றன" என நச்சரும் உரைத்துள்ளார். 2

மேலும் பழங்காலத்துக் கணக்கெழுதும் பெரியோர் 'ஈ'

---

2 தொல். எழுத்து. கஎ, ரு

என்பதனை 'இ' என்று மேலேசுழித்து எழுதியதையும் 'சுக்கு' என்பதனை 'சுக்கு' என்று 'க்' கையும் 'கு' வையும் இணைத்தெழுதிய வரிவடிவத்தையும் கண்டுள்ளோம். இன்னும் இதுபோல் சில பல மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கைவிடப்பட்டது.

மாற்றங்கள் பெரும்பாலும் எளிமை கருதியும் வசதி கருதியுமே ஏற்படுகிறது என்பது அறிந்த ஒன்று. முயற்சிச் சுருக்கத்தால் விளையும் விபரீதங்களைப் பற்றி இங்குப் பேச்சில்லை.

பெரும்பாலும் உலகத்துப் பொருள்கள் யாவற்றையும் ஓசைபற்றியும் அவ்வோசையின் பொருள் பற்றியுமே அறிந்து கொள்கிறோம். உதாரணமாகக் 'கல்' என்று சொல்லும்போது 'க' என்னும் எழுத்தும் 'ல்' என்னும் எழுத்தும் நம் கண் முன் தோன்றி ஓகோ 'கல்' போலும் என்று அறிவது இல்லை. 'கல்' என்ற ஒலி கேட்டவுடனேயே அச் சொல்லின் வரிவடிவம் நம் கண்ணுக்குப் புலனாகாமல் அச் சொல்லின் ஒலி வடிவமே நமக்கு அப்பொருளை இன்ன பொருள் என்று உணர்த்துவதால் வரிவடிவிலும் ஒலிவடிவே மிகச் சிறந்தது என்பது புலப்படும். சிறு குழந்தையும் ஓசைகளைக் கேட்டே பொருள்களை அறிகிறதேயன்றி வரிவடிவை மனத்துட்கொண்டு அதன் பின் அப்பொருளை இன்னது என்று அறிவதில்லை. ஆகவே ஒலிவடிவச் சிறப்பும் வரிவடிவச் சிறப்பின்மையும் ஓரளவுபுலப்படும். இதனை இலக்கண உரையாசிரியர்களும் நன்கு விளக்கிப் போந்துள்ளனர். ஆகவே வரிவடிவம் மாறி அதன் ஒலிவடிவம் மாறவில்லையென்றால் அதன் பொருளிலும் மாற்றம் இல்லை என்பது உணர்ந்து கொள்ளவேண்டிய ஒன்று.

ஒரு சொல் தன் வரிவடிவில் சிறிது மாற்றம் பெற்ற போதிலும் ஒலிவடிவில் முன்பு உச்சரிக்கப்பட்டதே போன்று உச்சரிக்கப்பட்டு அவ்வரிவடிவ மாற்றத்திற்குப் பின்னும் அதே பொருளைத் தருமானால் அம்மாற்றத்தைத் தடுக்க வேண்டுமென்பதோ வீணாகப் பழமை பறிபோய்விடுகிறதே என்று ஓலமிட வேண்டுவதோ இல்லை.

வீரமாமுனிவரின் மாற்றத்தால் எ், ஒ், என்று மேல்புள்ளி பெற்ற குற்றெழுத்து வரிவடிவில் எ, ஒ என்று மாற்றப்பட்ட

பின்னும் ஏ, ஓ என்ற ஒலிவடிவையே பெறுகிறதேயன்றி வேறு விதத்தில் ஒலிக்கப்படவில்லை. அதனால் அவ்வெழுத்துக்கள் தன்னை யுணர்த்திநிற்கும் பொருளிலும் மாற்றம் பெறவில்லை.

அதேபோன்று சமீப காலத்தில் சொல்லப்படுகின்ற 'விடுதலை' என்பதனை 'விடுதலை' என்று எழுதும் சீர்திருத்தமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. அதனால் தட்டெழுத்துப் பொறி, அச்சு இயந்திரம் போன்றவைகளில் 'முயற்சிச் சுருக்கம்' இலாப மாக அமைவதைக் காணலாம். இலாப நோக்கத்தோடு ஏதேதோ செய்கின்ற மக்கள் மொழியில் ஏன் எழுத்துச் சுருக்கத்தை விரும்பக்கூடாது?

இன்று தமிழ்த் தட்டெழுத்துப் பொறிகளிலும் அச்சு யந்திரங்களிலும் நாம் உலகத்தின் ஓட்டப்பந்தயத்தில் எந்த இலக்கைப் பிடித்துக்கொண்டிருக்கிறோம் எவ்வளவு முன்னேறி இருக்கிறோம் என்பது தெரிந்த ஒன்று. அவ்வியந்திரங்களினால் வளர்ந்துகொண்டிருக்கும் நாம் அவ்வியந்திர வசதிகளின் செம்மைப்பாட்டிற்குச் சில வரிவடிவ மாற்றங்களைச் செய்து கொள்வதோ, சில தேவையில்லாத புழக்கத்திலிருக்கும் எழுத் துக்களை நீக்குவதிலோ எவ்விதக் கூச்சமும் தேவையில்லையென்றே கூறுவேன்.

'விடுதலை' என்பதை 'விடுதலை' என்று எழுதுவதால் தட்டெழுத்துப் பொறியில் ஒரு தட்டுங்கோல் மிச்சப்படுகிறது. அது 'லை' என்பதில் உள்ள மேல் வளைவுக்காக இருக்கும் கோல் என்பதை அறிவோம்.

'விடுதலை' என்பதை 'விடுதலை' என்றெழுதாமல் மேலும் ஒரு மாற்றத்தோடு எழுதலாம் என்று இங்குப் புதிதாக ஒரு கருத்துக் கூறினால் தமிழுலகம் அதைச் சிந்திக்கவேண்டும் என்று வேண்டுகின்றேன்.

அது 'விடுதலய்' என்பதேயாகும். எனவே எந்த 'ஐகார' இறுதிபெறுகின்ற சொல்லாக இருந்தாலும் யகர மெய் இட்டே தாராளமாக வழங்கின் அதனால் அச்சொல்லின் ஒலிவடிவோ அதிலிருந்துபெறுகின்ற பொருள் முறையோ சிறிதும் மாறப்

போவதில்லை: உதாரணமாகக் 'கலை' என்பதை 'கலை' என்றும் 'கலய்'என்றும்'சிலை' என்பதைச் 'சிலை' என்றும் 'சிலய்' என்றும் எழுதுவதால்என்னபொருள்வேறுபட்டுப்போகிறது 'கலையும்சிலை யும்; கலையும் சிலையுமாகவே இருக்கிறது. வரிவடிவ மாற்றம் புதுமையாக இருப்பதால் பார்ப்பதற்கு மட்டும் வெறுப்பாகத் தோன்றலாம். ஆனால் ஒலிவடிவில் 'சிலய்' சிலையாகவே ஒலிக்கிறது.

இப்படி எழுதுவதால் என்ன இலாபம் என்று கேட்கத் தோன்றும். இப்பொழுது 'சிலை' என்பதை 'சிலய்' என்று எழுதுவதால் சி 'லை' என்ற எழுத்தின் மேல் விலங்கும் சி 'லை' என்ற எழுத்தின் (ை) துணையெழுத்துக்குமாகிய இரண்டு தட்டுக் கம்பி கள் மிச்சப்படுகின்றன. இது ஒரு பெருஞ்சாதனை அல்லவா?

மேலும் (ை) என்ற துணை எழுத்து தமிழ் மொழிக்கு வேண்டாத ஒரு துணை எழுத்து என்றே கூறவேண்டும் (ை) இத் துணையெழுத்துக்குத் தனித்த ஒரு ஓசை கிடையாது. ஆனால் இது எந்த உயிர் மெய்யெழுத்தோடு சேர்ந்தாலும் ஐகார ஓசையை நல்குவதைக் காணலாம். உதாரணமாகக் கை, பை, தை, வை, என்பவற்றில் அவையுண்டு.

(ை) இத் துணையெழுத்தின் தன்மையை வேறு ஒரு எழுத்து ஏற்றனவேயே உணர்த்தி நிற்குமானால் இவ்வெழுத்தை எடுத்துவிடுவதில் தவறு என்ன? தமிழ் மொழியில் யகரமெய் (ய்) இவ்வோசையை நல்குகிறது. உதாரணமாக 'நெய்' 'செய்' 'பொய்' என்பவற்றில் காணலாம்.

எனவே அவ்யகரமெய்யையே எல்லா இடங்களிலும் பயன்படுத்தி கய்(கை) பய்(பை) தய்(தை) வய்(வை என்று எழு துவதனால் தவறில்லை, ஓசையும் பொருளும் கூட மாறு படுவதில்லை.

தர்க்கரீதியாகவும் (ை) இத்துணையெழுத்து நீக்கப்பட வேண்டிய ஒன்று. கை, பை, தை, என்பவற்றில் இத்துணை முன்னும் செய், நெய், பொய் என்பவற்றில் யகர மெய் பின் னும் வந்து ஒரே ஐகார ஓசையைத்தான் தருகின்றன. எனவே' இரண்டில் ஒன்றை விலக்கலாம்.

யகர மெய்யையே நீக்கிவிட்டால் அது பெரும் தவருகப் போய்விடும். 'லக' என்று எழுதுவது போன்றே 'சைச' (செய்) என்று (ை) இத் துணையெழுத்தை ஏன் தமிழ் உலகம் முன்னுல் எழுதாது யகர மெய்யின் துணையைப் பின்னுல் நாடவேண்டும்? சிறிது சிந்திக்கவேண்டுகின்றேன்.

எனவே செய், பொய், மெய் என்பவற்றிற்கு (ை) இத் துணை எழுத்தின் துணையை முன்னுல் நாடுவதில்லை. பதிலாக யகர மெய்யே போடப்படுகிறது. அப்படியானுல் பை, கை, தை என்னும் இடங்களிலும் அத்துணையை நீக்கி கய், பய், தய், என்று எழுதுவதே சாலச் சிறந்தது.

'க' என்ற எழுத்தும் உயிர்மெய்; 'நெ' என்ற எழுத்தும் உயிர்மெய். இரண்டும் ஐகார ஓசையை உடைய சொல்லாக மாறும்போது 'க' வானது முன்னுல் (ை) இத்துணையைப்பெற்றுக் 'கை' என்றும் 'நெ' வானது முன்னுல் (ை) இத்துணையைப் பெற்று (நை) நெய் என்று ஆவது எவ்வகையாலும் பொருந்தாது.

எனவே 'நெய்' என்பது போலவே 'கய்' முதலாகிய சொற்களும் பின்னுல் அமைவதே சாலச்சிறந்ததாகும்.

இக்கட்டுரையின் பயனுய்க் கீழ்க்கண்ட வரிவடிவங்களைத் தமிழ் மொழியில் குறைக்கலாம்.

1. .... 'ீ' (லை என்பதன் மேல் வளைவு)
2. .... 'ை' (கை) என்பதன் முன் துணை)

தமிழ் உலகம் சிந்திக்குமாக.

'விளக்கமு'ம் பெயர்ப்பும்

—(-)—

V. G. சீனிவாசன், பி. ஏ., எல். டி.
மதுரை.

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை"

என்னும் குறட்பா திருக்குறளின் ஆறும் அதிகாரமான 'வாழ்க்கைத் துணை நலம்' என்பதிலே ஒன்பதாவது செய்யுளாக வருவதாகும்.

இதனை,

Before their scornful foes,
Bold as a lion those dare never walk,
Whose fame is sullied by their wives' base deeds,

எனமொழிபெயர்ப்பார் எல்லிஸ்அவர்கள். இக்குறளைவிளக்குவான் வேண்டிக் குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த 'நீதி நெறி விளக்கம்' எனும் செய்யுள் நூலிலிருந்து இரண்டு வெண் பாக்களை மேற்கோளாகக் காட்டி அவற்றையும் ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார் அப்பெருமகனார். காண்போம்.

"கற்பின் மகளிர் நலம்பிற் றுணவுகொள்
பொற்றொடி நல்லார் நனிநல்லர்—மற்றுந்தங்
கேள்வர்க்கு மேதிலர்க்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடுசூ ழார்" (83)

"ஏந்தெழின் மிக்கா னிளையா னிசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடை யின்சொலான் கேளெனினு மாதர்க்
கயலான்மே லாகு மனம்" (82)

Than unfaithful women, even those who sell their favours for subsistence,

Adorned by golden bracelets, are far preferable;

As neither to their husbands, nor to strangers, nor to themselves, nor to their relations,

Do they cause destruction.

Although their husband excel in beauty, although he be young and skilled in song,

Although his glances attract all female eyes,

And his pleasing speech breathe mirth and gaity around,

The minds of women will be fixed on another.

எட்டாம் அதிகாரமான 'அன்புடைமை'யிலே இறுதிச் செய்யுளாக விளங்கும்,

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்னும் குறட்பாவினை,

That breast alone contains a living soul,
which love inspires; void of this genial warmth,
'Tis bone O'erlaid with skin,

என மொழிபெயர்க்கும் எல்லிஸ் அவர்கள் விளக்குமாற்றான்,

"இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனிய மொழியும் கடுவே-யனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும்" (59)

எனும் நீதி நெறிவிளக்கப் பாடலைக் காட்டி, அதனை,

The words of the benevolent, whatever they are, are pleasant, but even pleasant words from the malevolent are poison; though borax refined in the fire cause great

heat, it cures diseases, while arsenic, though cooling to the body, kills,

என மொழி பெயர்ப்பார்.

பின்னர்ப் பத்தாம் அதிகாரமான 'இனியவை கூறல்' என்பதிலே இறுதிச் செய்யுளாக விளங்கும்,

"இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

என்பதனை,

Discourteous speech when courteous may be used,
Is like the sickly appetite, which culls
Fruit immature, leaving, the ripe untouched,

என்று பெயர்க்கும் எல்லீஸ் அவர்கள்,

"கண்ணேக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்கனியாம்-வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு." (37)

எனும் நீதிநெறி விளக்கப் பாடலைச் சுட்டி, ஆங்கிலத்திலே அதனை,

A kind glance of the eye is the bud; a smiling face the opening flower; truth graced by courteous words, the sweet fruit; and the generous are the immovable and wealth giving tree, which produceth liberality with other great and various benefits,

என மொழிபெயர்த்திடுவார்.

அடுத்துப் பதின்மூன்றும் அதிகாரமான 'அடக்கமுடைமை' என்பதிலே ஒன்பதாவதாக விளங்கும் கு[illegible]பாவான,

"தீயினுற் சுட்டபுண் ணுள்ள[illegible] மாருதே
நாவினுற் சுட்ட வடு."

என்பதனை,

The wound may heal, though from a burning brand,

And be forgotten; but the wound never heals
A burning tongue inflicts,

எனப் பெயர்த்துவிடுவார் எல்லிஸ் அவர்கள். இதற்கு விளக்கமாக அமையும் பொருட்டு நீதி நெறி விளக்கப் பாடல்கள் ஐந்தினை எடுத்துக்காட்டுவார். ஆனால் அவர் காட்டும் ஐந்துபாடல்களிலே மூன்று பாடல்களுக்கான ஆங்கில மொழி பெயர்ப்புடன் அவரது அரிய பெரிய நூல் திடீரென முற்றுப்பெற்றுவிடுகின்றது! நாம் கொடுத்துவைக்காதவர்கள்; என்ன செய்வது?

"கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படூஉம்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்." (16)

"ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு." (17)

"விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யு
நலத்தகையார் நல்வினையுந் தீதே—புலப்பகையை
வென்ற நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின்" (18)

என்னும் மூன்று பாடல்களின் மொழிபெயர்ப்பை மட்டிலும் நன்றியுடன் கொண்டுவப்போம்.

Literature and riches might really be deemed two species of wealth, if the possessors of them bowed their heads with humility, like the poor when they stand begging alms before them.

Men eminent in knowledge when in company

with the ignorant and perceiving their presumption, will behave themselves with humility. Is it not thus in the scales, the heavier goes down, while the lighter rises more and more?

The good deeds of good men, who carefully avoid what is forbidden and perform what is prescribed, become evil, when they extol themselves, boasting that having conquered their natural enemies, the five senses they have undeviatingly persisted in virtuous conduct.

எல்லிஸ் அவர்கள் அடுத்து எடுத்துக்காட்டுவன, 'தன்னை வியப்பிப்பான்', 'பிறராற் பெருஞ்சுட்டு' எனத் தொடங்கும் இரு வெண்பாக்களேயாம். அவற்றின் ஆங்கிலப் பெயர்ப்புகள் தோன்று முன்னர்ப் (304) பக்கமும் முடிந்து நூலும் முடிந்து விடுகிறதே என் செய?

திருக்குறட் பாக்களையும் மேற்குறித்த நீதிநெறி விளக்க வெண்பாக்களையும் முதன்முதலாக ஆங்கிலமொழியில் பெயர்த்து உலகிற்குதவிய (1813—1819) பெருந்தகை எல்லிஸ் அவர்களே யாவார் என்பதனைத் தமிழுலகம் நன்றியறிதலுடன் உணர்தல் வேண்டும்.

—(-)—

திருத்தணித் திருப்புகழ்

(கணபதி துதி)

மதுரை-மணிமன்ற அடிகள்.

தானத் தனன தன தன தன
தானத் தனன தன தன தன
தானத் தனன தன தன தன
தன தான,

ஓம் அட்சராய உவா முகா நம
சேமச் சுபோத திவா கரா நம
ஊழ்நிக்ர காச துரா நமோ நம
உலகேழும்

ஓதிப் பராவு மதித னே நம
மாசித்தி பாக மனோ கரா நம
ஓர் புத்தி நாயக பூசிதா நம
பல கோடி

நாமச் சொரூப பரா பரா நம
தாமக் கிரீட மகோ தரா நம
நாதப்ரமா புனிதா நமோ நம
கலி தீரரய்!

ஞானப்ரகாச மகேசுரா நம
கானப்ரியா கருணை கரா நம
ஞாலப்ர தாப கரா நமோ நம
கதி தாராய்!

காமக் குரோத நிவாரணா நம
மாமுக்ய சீவன காரணா நம
காவிக்கினே சுரனே நமோ நம
திருமாலாம்

காகுத் தன்மா மருகா நமோ நம
ஆகுப் புராதன வாகனா நம
காதற் குமார சகோதரா நம
சிவகாமி

ஆம் அர்த்த நாரி சுதா சுதா நம
ஓமுக் கணுதிப சோபிதா நம
ஆதிக்குமாதி அரோ கரா வென
அடியார்கள்

ஆடிச் சதா துதிபாடி மாநிலே
கூடிக் குலா தணிகா சலா நம
ஆபத் சகாய விநாயகா நம
பெருமானே!

திராவிட மொழிகள்

—○—

சு. சக்திவேல் M. A., M. A.,
மானிடவியல் ஆராய்ச்சித் துறை, கல்கத்தா-13.

கருத்தினைப் புலப்படுத்துவதற்கும் சிந்தனை செய்வதற்கும் உரிய கருவி மொழியாகும். மொழி மக்களது வாழ்வில் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சியுற்று வரும் கலை என்பது மொழியியலாரின் கருத்தாகும். இந்தியா பல இன மக்களைக்கொண்டதாகும். அவர்கள் பேசும் மொழிகள் வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்தவைகளாகும். அவ்வாறு பேசப்படும் மொழிகளை மொழியியலார் நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரித்துள்ளனர். விந்திய மலைக்குத் தெற்கே பெரும்பாலும் திராவிட மொழிகள் பேசுவோரும் மத்திய இந்தியாவின் மலைப்பகுதிகளில் ஆஸ்டிரிக் மொழிகள் பேசுவோரும் சிந்து, கங்கைநதி தீரங்களில் இந்தோ-ஆரிய மொழிகள் பேசுவோரும் இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புறங்களில் திபெத்திய-சீன மொழிகள் பேசுவோரும் உளர். இவண் திராவிட மொழிக் குடும்பத்தைப் பற்றி விரிவாகக் காண்போம்

திராவிட மொழிகளின் வளர்ச்சி நிலையை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

1. டாக்டர் கால்டுவெல்லுக்கு முன்பிருந்த நிலை.
2. டாக்டர் கால்டுவெல் கால நிலை.
3. ஸ்டென் கோனேவ்வின் இந்திய மொழியியல் சர்வே (நான்காம் பாகம்) (Linguistic Survey of India, vol. IV)
4. இன்றைய நிலை.

19-ஆம் நூற்றுண்டில் எல்லிஸ் என்பவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளுக்கிடையேயுள்ள

ஒற்றுமைகளைவிளக்கிக்கட்டுரைஎழுதினர். ஆனால், டாக்டர்கால்டுவெல் அவர்கள்தான் 1856-ஆம் ஆண்டில் திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் ஒன்றை ஒலி அடிப்படையில் எழுதினர். கால்டுவெல் காலத்தில் ஒலியியல் துறை அவ்வளவாக முன்னேறவில்லை. இவரும் தென் திராவிடமொழிகளிலே பெரிதும் ஈடுபட்டிருந்தார். எல். வி. இராமசாமி அய்யர் அவர்கள் மலையாள மொழி குறித்துப்பல கட்டுரைகளைவெளியிட்டுள்ளார். 1946-ஆம் ஆண்டு ஜூல்ஸ் பிளாக்கின் (Jules Bloch) 'திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு' என்ற நூல் வெளியானது. திராவிட மொழியியல் உலகிலே போற்றிப் பாதுகாக்கவேண்டியவை டாக்டர் எமனோ, டாக்டர் பர்ரோ அவர்களது 'திராவிட சொற்பிறப்பியல் அகராதி' (Dravidian Etymological Dictionary) எனலாம்.

1798-ஆம் ஆண்டில் குடகு, துளு மொழிபற்றி ஆராயப்பட்டது. 1837-ஆம் ஆண்டு தோடா மொழியும் 1838-ஆம் ஆண்டு பிராஹுவி மொழியும் 1866-ஆம் ஆண்டு கோலாமியும் 1884-ஆம் ஆண்டு மால்டோ மொழியும் வெளி உலகுக்குக் கொணரப்பட்டன. 1853-ஆம் ஆண்டு லெட்ச்மஜ்ஜி என்பவர் குய் மொழிக்கு இலக்கணம் எழுதினர். இந்திய மொழியில் சர்வே நான்காம் பாகத்தில் பார்ஜி மற்றும் பல மொழிகளைப்பற்றிக்குறிப்பிடப்பட்டுள்ளது. இருளாவைக் கிளை மொழியாகக் கருதுகின்றனர். 1672-ஆம் ஆண்டு பிலிப் பால்டேயஸ் அவர்களால் தமிழ் இலக்கண நூலொன்றும் 1716-ஆம் ஆண்டில் மற்றொரு தமிழ் இலக்கணமும் வெளியிடப்பட்டது. 1679-ஆம் ஆண்டில் தமிழ்-போர்த்துக்கீஸ் அகராதியொன்றும் வெளியானது. 1799-ஆம் ஆண்டு ஃபேபரிக்ஸ் தரங்கம்பாடி அகராதியொன்றினையும் 1856-ஆம் ஆண்டு கிரௌல் தமிழ் இலக்கணம் ஒன்றினையும் வெளியிட்டார்கள். அக்காலத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள்தாம் திராவிட மொழிகளைக் கற்றுப் பல இலக்கண நூல்களை எழுதினர். இப்பாதிரிமார்களே குய், கோந்த் மொழிகளை ஆராய்ந்தனர். திராவிட மொழியியல் உலகில் டாக்டர் எமனோ, டாக்டர் பர்ரோ, சுப்பிரமணி சாஸ்திரியார், எல். வி. இராமசாமி அய்யர், டாக்டர் கிட்டல், டாக்டர் குண்டர்ட், சுதிபூஷன் பட்டாச்சாரியா, துணைவேந்தர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் ஆகியோர்களின் பணி குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னைப் பல்கலைக் கழகம் 1936–ஆம் ஆண்டில் தமிழ்க் கலைக்களஞ்சியம் வெளியிட்டது 1941–ஆம் ஆண்டு நரசிம்மய்யா அவர்கள் பழைய கன்னட கல்வெட்டுக்களது இலக்கணம் ஒன்றும் 1937–ஆம் ஆண்டில் சி என். இராவ் அவர்கள் தெலுங்கு மொழி வரலாறு ஒன்றும் வெளியிட்டார்கள் டாக்டர் எமனோ அவர்கள் கோடா, கோலாமி மொழிகளைப்பற்றி இலக்கண நூல் எழுதியுள்ளார். பேராசிரியர் பர்ரோவும் சுதிபூஷன் பட்டாச் சாரியா அவர்களும் பார்ஜி இலக்கண நூல் வெளியிட்டுள்ளார்கள். 1946–ஆம் ஆண்டு வெளியான கெய்யின் கன்னட மொழியின் வரலாற்று இலக்கணமும் எ வி சேகரின் மலையாள மொழி வளர்ச்சியும் டாக்டர். கிருஷ்ணமூர்த்தியின் தெலுங்கு வினை பற்றிய நூலும் இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்டென் கோனோவ்வால் தொகுக்கப்பட்ட இந்திய மொழியியல் சர்வே மூலம் பல திராவிட மொழிகளைப் பற்றி அறிகிறோம். அக்காலத்தில் கிடைத்த சான்றுகளைக்கொண்டு ஓரளவு விளக்க முயன்றுள்ளார். மொழியியல் துறையில் மேலும் மேலும் புதிய ஆய்வுகள் நடைபெறுவதால், இம் மொழியியல் சர்வேயில் காணப்படும் மொழிப் பிரிவுகள் சிறிது மாற்றமடைந்துள்ளன எனலாம். இம் மொழியியல் சர்வேயினை அடிப்படையாக வைத்துத் திராவிட மொழிகளனைத்தையும் மீண்டுமொருமுறை ஆராயவேண்டும். அண்மையில்கூடப் பெங்கோ (Pengo) என்ற திராவிட மொழியை மொழி வல்லுநர்கள் வெளி உலகுக்குக் கொணர்ந்துள்ளார்கள்.

திராவிட மொழிகளை அவ்வவ்விடத்தில் பேசுவதைக் கொண்டே வட திராவிட மொழிகள், மத்திய திராவிட மொழிகள், தென் திராவிட மொழிகள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம். அம்மொழிகளுக்கிடையேயுள்ள உறவினைவைத்துக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

திராவிட மொழிகள்:- (1) வடதிராவிட மொழிகள்
(2) மத்திய திராவிட மொழிகள்
(3) தென் திராவிட மொழிகள்

1. வடதிராவிட மொழிகள்:- (அ) பிராஹுவி.
(ஆ) மால்டோ; குருக்.

2. மத்தியதிராவிடமொழிகள்: (அ) (1) கூவி; குய்.
(அ) (2) கோந்த்; கோண்டி.
(ஆ) (1) கதபா; பார்ஜி.
(ஆ) (2) நாயக்கி; கோலாமி.

3. தென்திராவிடமொழிகள்: (அ) தெலுங்கு
(ஆ) துளு
(இ) (1) குடகு; கன்னடம்.
(இ) (2) (i) தோடா; கோடா.
(இ) (2) (ii) மலையாளம்; தமிழ்.

இம்மொழிகளனைத்தும் பழந் திராவிடமொழியினின்றும் (Proto Dravidian) பிரிந்தவைகளாகும். 'திராவிடம்' என்ற சொல் வால்மீகி இராமாயணத்திலும் பாரதத்திலும் உள்ளது. குமாரில பட்டர் திராவிட மொழிகளை ஆந்திர திராவிட பாஷை என்று குறிப்பிடுகிறார். இந்தியா முழுதும் ஒரு காலத்தில் திராவிட மொழியே பரவியிருந்ததாக டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி கூறுகிறார். ரிக்வேதத்திலேயே பல திராவிடச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்தியாவில் ஆரிய மொழிக்கு முற்பட்டது திராவிட மொழியாகும். திராவிட மொழிகள் சமஸ்கிருதத்தினின்றும் பிறந்தவையல்ல; மற்றும் திராவிட மொழிகட்கும் வடமொழிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை டாக்டர் பர்ரே, கால்டுவெல் போன்ற பேரறிஞர்கள் தெளிவுபட விளக்கியுள்ளனர். இந்தோ-ஆரிய மொழி வளர்ச்சியில் திராவிட மொழிக்கும் பெரும் பங்குண்டு. பழந்திராவிடக் கூறுபாடுகளைத் தமிழில் அதிகமாகக் காண்கிறோம். எனவேதான் பழந்திராவிட மொழியே தமிழ் எனக் கூறுவாருமுளர். ஆனால் உண்மை அதுவன்று:

திராவிட மொழிகள் குறித்து ஆய்வு ஏற்பட்ட பின்னரே இது தனி மொழிக்குடும்பம் என்ற ஆய்வுக்கு வந்தனர்.

தென் திராவிட மொழிகள்

தமிழ்

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்' என்று பழங்காலத்திலேயே தமிழ்வழங்கிய நாட்டின் எல்லை கூறப்பட்டுள்ளது. தெலுங்கரும் கன்னடரும் தமிழை 'அரவம்' என்கின்றனர். அக்காலத்தில் போர்த்துக்கீசியர் தமிழுக்கும் மலையாளத்திற்கும் வேறுபாடு அறியாத காரணத்தால் மலபார் மொழியென்றே அழைத்தனர். தற்பொழுது தமிழ் மொழி தமிழ்நாடு, இலங்கை, மலேயா, தென் ஆப்பிரிக்கா, பீஜித்தீவு முதலியவிடங்களில் பேசப்படுகின்றது. திராவிட மொழியின் அமைப்பைப்பெரும்பாலும்காட்டவல்லது தமிழே என்பது நன்கு புலனாகும். எனவேதான் டாக்டர் கால்டுவெல் அவர்களும் தமிழை அடிப்படையாக வைத்தே மற்ற மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தார்.

தெலுங்கு

ஐத்ரேலிய பிரமாணத்தில் 'ஆந்திரா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலேயர்கள் 'எஜன்டோ' என்று இம்மொழியைக் குறிப்பிட்டார்கள். பழந்தமிழ் இலக்கியத்தில் ஆந்திரர் 'வடுகர்' என்றும் அந்நாட்டு 'வடுகர் மொழி பெயர் தேயம்' என்றும் குறிக்கப்பட்டுள்ளமை கருதத்தக்கது. பிளினி அவர்களும் 'ஆந்த்ரே' என்று குறிப்பிட்டுள்ளார். அசோகரது கல்வெட்டுக்களிலும் ஆந்திரரைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது. இம்மொழி ஆந்திர மாநிலத்தில் பேசப்படுகிறது. தெலுங்கை மத்திய திராவிட மொழியுடன் வகைப்படுத்துவோருமுளர்.

கன்னடம்

கன்னட மொழி மைசூர் மாநிலத்தில் பேசப்படுகிறது. தமிழிலக்கியத்தில்மைசூர் 'எருமை நாடு' எனக் குறிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் கூறும் எல்லையால் கி. மு. 300-க்கு முன்பே

கன்னடம் பிரிந்திருக்கவேண்டும். கன்னட மொழியினின்று சிறிது வேறுபட்டதே துளு மொழியாகும். கர்நாடகம் என்பது கரு+நாடு+அகம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு என்றார் டாக்டர் குண்டர்ட். கன்னட மொழி வளர்ச்சியை மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாம்.

i பழங்காலக் கன்னடம் (10–ஆம் நூற்றாண்டிலிருந்து 13–ஆம் நூற்றாண்டு வரை)

ii மத்தியகாலக் கன்னடம் (13-ஆம் நூற்றாண்டிலிருந்து 15-ஆம் நூற்றாண்டு வரை)

iii தற்காலக் கன்னடம் (15–ஆம் நூற்றாண்டிலிருந்து)

மலையாளம்

கேரளா மாநிலத்தில் பேசப்படுகின்றது. இதனைத் தமிழொடு ஒத்த மொழி என்பதைவிடத் தமிழின் கிளைமொழி எனலே பொருந்தும் என்கிறார் டாக்டர் கால்டுவெல். இராம சரிதம் ஏறத்தாழத் தமிழிலக்கியம் போலவே உள்ளது எனலாம். பிற்காலத்தில் வடமொழிச் செல்வாக்காலும் கிரந்த எழுத்தை யொட்டி எழுத்துக்கள் அமைந்ததாலும் இது தனி மொழி யாயிற்று எனலாம்.

துளு

இம்மொழி மங்களூரைச் சுற்றிப் பேசப்படுகின்றது. பிரிகெல் என்னும் பேரறிஞர் இம்மொழிக்கு முதன்முதலில் இலக்கணம் எழுதினர். பாதிரியார்கள் கன்னட எழுத்தில் இம்மொழியில் நூல்கள் எழுதியுள்ளார்கள். இம் மொழி கன்னட மொழியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

குடகு

இம் மொழி குடகு நாட்டில் பேசப்படுகின்றது. இம் மொழி தமிழோடும் மலையாளத்தோடும் நெருங்கிய தொடர்புடையது என டாக்டர் மோக்லிங் கூறுகிறார். இம்மொழிக்குக் கோல் என்பவரே இலக்கணம் வெளியிட்டுள்ளார்.

தோடா

நீலகிரியில்வாழும் தோடாப் பழங்குடி மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். கோடா என்றமொழியும் நீலகிரியில்வாழும் கோடா மக்களால் பேசப்படுகின்றது. படகா என்ற மொழியும் அங்கு வாழும் படகா மக்களால் பேசப்படுகின்றது. கன்னட மொழியின் பழமையான கூறுபாடுகளை இம் மொழியில் காணலாம்.

மத்திய திராவிட மொழிகள்

மத்திய திராவிட மொழிகள் அனைத்தும் ஆந்திரா, ஒரிசா, மகாராட்டிரம், மத்திய பிரதேசம் முதலிய பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன.

ஹாட்ஜ்ஸன் என்பவர்தான் முதன்முதலில் பழங்குடி மொழிகளைப்பற்றி ஆராய்ந்து 1853-ஆம் ஆண்டு பல கட்டுரைகள் வெளியிட்டார். இவர் செய்த ஆராய்ச்சியின் பலனாகத்தான் பெரும்பாலான பழங்குடி மொழிகள் சமஸ்கிருதத்தினின்றும் பிறந்ததல்ல என்பது தெரியவந்தது. மாக்ஸ்முல்லர்தான் இம் மொழிகளை முண்டா, தமிழியன், திபெத்தோ-பர்மிய இனம் எனப்பிரித்தார். தமிழியன் பிரிவே பின்னர்த் திராவிடம் என்றும் முண்டா பிரிவே ஆஸ்டிரிக் என்றும் பெயர் பெறலாயிற்று. டால்டன் என்பவர் பழங்குடி மக்களும் இந்தோ-ஆரிய மொழிகளைப் பேசுகின்றனர் என்ற உண்மையை வெளியிட்டார்.

மத்திய திராவிட மொழிகளில் கோலாமி-பார்ஜி ஒரு குழுவாகவும் கோண்ட், குய், கூவி மற்றொரு குழுவாகவும் கருதப்படுகின்றது. கோலாமி-பார்ஜி குழுவில் கோலாமி, நாயக்கி, பார்ஜி, கதபா (ஒல்லாரி சலூர்) முதலிய மொழிகளடங்கும். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பெங்கோ மொழியும் மத்திய திராவிடமொழிகளுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது

கோலாமி

வார்தா மாவட்டத்தில் வாழும் கோலாம் பழங்குடிகள் இம்மொழி பேசுகின்றனர். கோலாமி மொழிக்கும் கோந்

மொழிக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. கோலாமி மொழிக்குத் தெலுங்கு மொழியுடனும் கன்னட மொழியுடனும் தொடர்பிருப்பதாகக் கூறுகின்றனர். இம் மொழியை 43 ஆயிரம் பழங்குடிகள் பேசுவதாகக் கூறுகின்றனர்.

கோந்த்

இம்மொழி மத்திய இந்தியாவில் பேசப்படுகின்றது. கோந்த்வானாவின் கிழக்குப் பகுதி, ஒரிசாவின் மலைத்தொடர்கள் பஸ்தார் பகுதிகளில் வாழும் பழங்குடிகள் கூ அல்லது கந்த் மொழியைப் பேசுகின்றனர். கோந்த் மொழிபற்றி டால்டனின் 'வங்க இனவியல் விளக்கம்' என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

நாயக்கி:

ஸ்டீபென் ஹிஸ்லோப் அவர்கள் இப்பழங்குடிகளைப் பற்றியும் இவர்களது மொழி குறித்தும் ஆராய்ந்து கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். இது கோலாமியுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

பார்ஜி:

மத்தியப் பிரதேசத்தில் பஸ்தாரில் வாழும் பழங்குடி மக்கள் இம் மொழி பேசுகின்றனர். இதனை கோந்த் மொழியின் கிளை மொழி எனக் கூறுவோருமுளர். கூயி மொழியும் கோந்த் மொழியும் தெலுங்கு மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவை. கொண்டர்களென அழைக்கப் பெறும் பழங்குடி மக்கள் 'குய்' எனும் திராவிட மொழி பேசுகின்றனர். கோண்டி மொழியைப்பற்றி வில்லியம்ஸன் சில கட்டுரைகள் எழுதியுள்ளார். லெட்ஜ்ம்ஜ்ஜியால் ,குய், மொழிக்கு இலக்கணம் எழுதப் பட்டது. மத்திய திராவிட மொழிகளனைத்தும் திணை, பால் அமைப்பில் ஒரே மாதிரியானவைகளாகும். சில மத்திய திராவிட மொழிகளில் பெண்பாலை ஒன்றன் பாலுடன் சேர்த்துக் கூறும் வழக்கமும் உண்டு. இருபத்தியொன்று திராவிட மொழிகளில் பதின்மூன்று திராவிட மொழிகள் கோதாவரி நதிக்கு வடக்கே பேசப்படுகின்றன.

வடதிராவிட மொழிகள்:

குருக்:

சோட்டா நாக்பூரில் வாழும் பழங்குடி மக்கள் இம் மொழியைப் பேசுகின்றனர். ஒரொவென்கள் என்றழைக்கப்படுகின்ற இப்பழங்குடி மக்கள் ஒரு காலத்தில் கர்நாடகப் பிரதேசத்திலிருந்து நர்மதை நதிப் பள்ளத்தாக்கு வழியாகச் சோட்டா நாக்பூர்க்குச் சென்று குடியேறியதாகக் கூறப்படுகின்றது. இதற்கு இலக்கிய வளமோ அல்லது எழுத்து வடிவோ கிடையாது. பாட்ஸ்க் என்பவர் இம்மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார். 1900–ஆம் ஆண்டு ஹேகன் என்பவர் 'குருக் இலக்கண நூல்' ஒன்று வெளியிட்டுள்ளார்.

மால்டோ:

வங்காளத்திலுள்ள இராஜ்மஹால் குன்றுகளில் வாழும் மால்பஹாரியா பழங்குடிகள் இம்மொழியைப் பேசுகின்றனர். இம்மொழியை 'மாலர்' என்றும் கூறுவதுண்டு. இவர்கள் தங்களைச் சௌரியா என்றும், மொழியை இராஜ்மஹாலி என்றும் கூறிக் கொள்கிறார்கள்.

பிராஹுவி:

இந்தியாவின் வடமேற்கேயுள்ள பலுசிஸ்தானத்தில் பேசப்படுகின்றது. இவர்கள் தங்களைக்குறிப்பதற்குப் 'பிராஹுவி' என்ற சொல்லையே பயன்படுத்துவதாக டாக்டர் டிராம்ப் கூறுகிறார். இம்மொழியில் எழுத்துமொழி இலக்கியம் கிடையாது. ஈரானிய மொழியின் செல்வாக்கினை இம்மொழியில் காணலாம். குருக், மால்டோ மொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்தியாவின் வடமேற்குப் பகுதியான பலுசிஸ்தானத்தில் இம்மொழி பேசப்படுவதால், திராவிடர்கள் இவ்வழியாக வந்து சிந்து நதிக்கரையில் தங்கினர் என்பதற்கும் தென்னிந்தியாவினின்று இவ்வழியாக நடு ஆசியாவுக்குச் சென்றனர் என்ற கொள்கைக்கும் இதனைச் சான்றாகக் கொள்ளலாம்.

பழந்திராவிட மொழியினின்றும் திராவிட மொழிகள் பிரிந்த கால எல்லையைச் சொற்கோவைப் புள்ளியியல் கணக்கீட்

டின்மூலம் ஓரளவு தோராயமாகக் கணக்கிடலாம். சொற்கோவைப் புள்ளியியல் கணக்கீட்டு முறையானது மற்ற முறைகளையோ அல்லது தகவல்களையோ மாற்றுவன அல்ல; இம்முறையானது மற்றவற்றுடன் இணைந்து பெரும்பயனை நல்கக் கூடியதாகும். இவ்வகை ஆராய்ச்சியினால் மொழியியலாரும் வரலாற்றாசிரியர்களும் மானிடவியலாரும் பெரும் பயனடைவர் என்பது திண்ணம். உதாரணமாக, ஒரு பொருளைக் குறிக்கக் கூடிய மற்ற திராவிட மூலச் சொற்களை எடுத்துக்கொண்டு ஒப்பிட்டு ஆராயவேண்டும். தென் திராவிட மொழிகளைச் சொற்கோவைப் புள்ளியியல் கணக்கீட்டின் முறைப்படி ஆராய்ந்ததில், தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு என்ற வரிசையில் அதன் உறவு முறையை வகைப்படுத்துகிறார்கள். பழந்திராவிட மொழியிலிருந்து தென் திராவிட மொழிகள் கி. மு. ஏழாம் நூற்றாண்டு அளவிலே பிரிந்திருக்கவேண்டும். மத்திய திராவிட மொழிகளும் வடதிராவிட மொழிகளும் பிரிவுற்ற காலம் சற்று அதிகமாகவே தோன்றலாம். பிராஹுவி போன்ற மொழிகளில் இரானிய செல்வாக்கைக் காண்கிறோம். இம் மொழிகட்கு எழுத்திலக்கியமும் கிடையாது. சொற்கோவைப் புள்ளியியல் கணக்கீட்டின் அடிப்படையில் மொழிகள் பிரிவுற்ற நிலையை அடுத்துவரும் ஆன்டிரனோவ்வின் சொற்கோவைப் புள்ளியியல் ஆய்வு முறை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இக்கால எல்லைகளைத் தோராயமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். இத்துறையில் மேலும் நன்கு ஆராய்ந்தால் திராவிடமொழிகள் பிரிந்த கால எல்லையை வரையறுக்கலாம். ஆன்ட்ரனோவ் அவர்கள் வடதிராவிட மொழிகளையும் மத்திய திராவிட மொழிகளையும் தென் திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்த சொற்கோவைப் புள்ளியியல் கணக்கீட்டின் முடிவுகள்:

மொழிகள்	பாதுகாக்கப்பட்டபகுதி (சதவீதம்)	பிரிந்த காலம் (1000ஆண்டு)	பிரியஆரம்பித்தகாலம் (நூற்றாண்டு)
தமிழ்: கோலாமி	35	3. 480	15 B. C.
தமிழ்: பார்ஜி	34	3. 423	15 "
தமிழ்: கோண்டி	29	4: 103	22 "

மொழிகள்	பாதுகாக் கப்பட்டபகுதி (சதவீதம்)	பிரிந்த காலம் (1000ஆண்டு)	பிரியஆரம் பித்தகாலம் (நூற்றுண்டு)
தமிழ்: குருக்	25	4. 596	26 "
தமிழ்: மால்டோ	23	4. 872	29 "
தமிழ்: பிராஹுவி	21	5. 174	32 "
கன்னடம்: கோலாமி	40	3. 037	11 "
கன்னடம்: பார்ஜி	39	3. 121	12 "
கன்னடம்: கோண்டி	30	3. 945	20 "
கன்னடம்: குருக்	29	4. 103	22 "
கன்னடம்: மால்டோ	26	4. 465	25 "
கன்னடம்: பிராஹுவி	22	5. 019	31 "
தெலுங்கு: கோலாமி	40	3. 037	11 "
தெலுங்கு: பார்ஜி	38	3. 207	13 "
தெலுங்கு: கோண்டி	29	4. 103	22 "
தெலுங்கு: குருக்	24	4. 731	28 "
தெலுங்கு: மால்டோ	23	4. 872	29 "
தெலுங்கு; பிராஹுவி	16	6. 075	41 "
கோலாமி: பார்ஜி	54	2. 042	1 "
கோலாமி: கோண்டி	46	2. 574	6 "
கோலாமி: குருக்	31	3. 882	19 "
கோலாமி: மால்டோ	29	4. 103	22 "
கோலாமி: பிராஹுவி	19	5. 505	36 "
பார்ஜி: கோண்டி	43	2. 797	8 "
பார்ஜி: குருக்	29	4. 103	22 "
பார்ஜி: மால்டோ	29	4. 103	22 "
பார்ஜி: பிராஹுவி	22	5. 019	31 "
கோண்டி: குருக்	24	4. 731	28 "
கோண்டி: மால்டோ	24	4. 731	28 "
கோண்டி: பிராஹுவி	18	5. 607	37 "
குருக். மால்டோ	63	1. 521	5 A. D.
குருக்: பிராஹுவி	19	5. 505	36 B. C.
மால்டோ: பிராஹுவி	17	5. 874	39 "

திராவிட மொழிகளனைத்தும் பழந்திராவிட மொழியினின்றும் பிறந்தவை யென்றும் சம்ஸ்கிருதத்தினின்றும் பிறந்தவை அல்ல என்றும் அம்மொழிகள் பேசப்படுகின்ற பகுதி பற்றியும் அவைகள் பிரிவுற்ற காலஎல்லை குறித்தும் இவண் நன்கு அறியக் கிடக்கிறோம் மறைந்து கொண்டு வரும் சில திராவிடப் பழங்குடி மொழிகளைப் பற்றி (tribal languages) உடனே ஆராயப்படவேண்டும். திராவிட மொழிகளின் சர்வே ஒன்றினையும் கிளைமொழி ஆய்வு (Dialect study) ஒன்றினையும் மிகவும் விரிந்த அளவில் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு திராவிட மொழிக்கும் மொழிவரலாறு எழுதப்படவேண்டும். அனைத்துத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணமொன்று திராவிட மொழியியல் பேரறிஞர்களால் மேற்கொள்ளப்படவேண்டும்:

— —)(— —

பாரதியின் ஒரு பாடல்

இல. தாணம்மாள்,
விருதுநகர்.

செந்தமிழ் மொழி இலக்கிய வளமும், இலக்கண வளமும் மிகுந்தது என்பதை நாம் யாவரும் அறிவோம். அதன் வளத்தைப் பண்படுத்தி, எருவூட்டி வந்தனர், அவ்வப்போது தோன்றிய புலவர் பலர். அப்புலவர் வரிசையில் செம்மாந்து வீற்றிருப்பவரில் ஒருவர் புதுமைக் கவிஞர் பாரதியார். அவர் ஒரு புதுமைக் கவி மட்டுமன்றி, ஒரு தேசியக்கவி, புரட்சிக்கவி, உணர்ச்சிக்கவி. புதுமைக்கருத்துக்களை அள்ளி அள்ளித்தரும் அவரது கவிதைகள் படிக்கப்படிக்கப் பயன் அளிப்பன. இன்பம் தருவன. நவில்தோறும் நயம்பயப்பன. அவர் பாடல்களில் 'கண்ணன்-என் சீடன்' எனும் பகுதியைப் பார்ப்போம்.

கண்ணனைத் தோழனாய்த், தாயாய்த், தந்தையாய்க், காதலியாய்க், காதலனாய்க், குழந்தையாய்க், குருவாய்க் கண்ட பாரதி சீடனாகவும் காண முயற்சிக்கிறார் இப்பகுதியில். ஆனால் முடியவில்லை. சீடனாக வந்தவனே இறுதியில் ஆசிரியனாகஅமர்ந்து விடுகிறான்.

கண்ணன் தானே ஆசிரியனைத் தேடிப் பாரதியிடம் வருகிறான். அறிவினிற் குறைந்தவன் போலவும், பாரதியின் துணை கொண்டு மேம்பாடு எய்த வந்தவன் போலவும் வருகிறான். வந்தவனைப் பாரதி பலவாறு முயன்று நல்லவனாக்க நினைக்கிறார். ஆனால் கண்ணனோ அவருக்குத் தொல்லை கொடுக்கும் பொல்லாதவனாக இருக்கிறான். பித்தனாய்க் காட்டாளாகி நிற்கிறான். இறுதியில் சீடனாக வந்தவன் குருவாய் அமைந்து விடுகிறான். அவரைத் தடுத்தாட்கொண்டு உய்வித்த, எல்லையற்ற கருணை வள்ளலான இறைவனாகவும் விளங்குகிறான்.

உயிர்கள் தவறிழைக்கும் போது, இறைவன் பல வடிவங்களில் வந்து அவ்வுயிர்களை உய்விப்பது வழக்கம். உலக வாழ்க்

கையில் ஆன்மா பக்குவப்பட்டு நிற்கும் கா ல ம் வரும்போது, இறைவன் பக்தர்களைத் தானே, தேடி ஓடி வருவான். மணிவாசகரைக் குருந்த மரத்தடியில் காட்சி கொடுத்து ஆட்கொள்கிறுன். சுந்தரரைக் கிழவேதியர் வடிவத்தில் வந்து தன்பால் ஈர்க்கிறுன். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து இறைவன், உயிர்களைக் காக்கிறுன். பாரதியிடமும் கண்ணன் சீடன் வடிவில் வருகிறுன்.

மனித ஆன்மாவானது, ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களால் கட்டுண்டு தவிக்கும்போது அவற்றிலிருந்து விடுபட இறைவனின் துணை மிகவும் தேவை. "எனைப்புகுவிப்பாய் நின் தொழும்பில்" என்று இறைவனை நினைத்து அவனைத் துதிக்கவும் கூட இறைவனின் கருணை தேவை என்பதைத் தெளிவு படுத்துகிறார் ஓர் அன்பர்: அவன் அருளால் தான் அவன் தாள் வணங்க முடியும். கண்ணனும், பாரதியிடம் வந்து சேர்ந்ததை,

"எனைத் தண்டனை புரிந்திடத் தானுளங்கொண்டு
மாயக் கண்ணன் வலிந்தெனைச் சார்ந்து"

என்ற அடிகளால் நமக்குப் புலப்படுத்துகிறுர்.

பாரதியின் உள்ளக் கயத்தில் சில அழுக்குகள், ஆணவம், கன்மம், மாயை என்பவைகள் படிந்துள்ளன. அவற்றை அவரே,

"உளத்தினை வென்றிடேன், உலகினை வெல்லவும்
தானகம் சுடாதேன் பிறர்தமைத் தானெனும்
சிறுமையின் அகற்றிச் சிவத்திலே நிறுத்தவும்
தன்னுளே தெளிவும், சலிப்பிலா மகிழ்ச்சியும்
உற்றிடேன், இந்தச் சகத்திலே உள்ள
மாந்தர்க்கு உற்ற துயரெல்லாம் மாற்றி
இன்பத் திருத்தவும் எண்ணிய பிழைக்கு"

என்னை அவற்றினின்றும் விடுவிக்கவே இறைவன் வந்தனன் என்று விளக்கி விடுகின்றுர்.

மேலும் பாரதியார் நீர்க்குமிழிபோன்ற இந்த உலக வாழ்க்கையை உண்மை என்று நம்பி வாழ்ந்தார் என்பதையும்,

"நானிலத்தவர் தம்
மதிப்பையும், புகழுறு வாழ்வையும், புகழையும்
தெய்வமாக் கொண்ட சிறு மதியுடையேன்"

என்று அவர் வாக்காலேயே நமக்குத் தெளிவு படுத்தி விடுகிறுர்.

செம்பில் களிம்பு போல் பற்றியிருக்கும் மலங்களை இறைவனே நீக்கமுடியும். செம்பிலிருந்து களிம்பை நீக்கப் புளிதேவைப் படுகிறது. அழுக்குத் துணிகளைத் துவைக்க வண்ணுன் உவர் மண்ணைப்பயன் படுத்துகிறுன். மாசை அகற்ற இன்னொரு மாசு தேவைப்படுகிறது அதைப்போல மனித ஆன்மாவிலிருந்து மாசுகளை அகற்ற இறைவன் பின்னும் பல மாசுகளைச் சேர்க்கிறுன். பாரதியின் கண்ணனும் அங்ஙனமே ஏற்கனவே பாசி படிந்த அவருடைய உள்ளத்திலே, மேலும்

"புகழ்ச்சிகள் கூறியும், புலமையை வியந்தும்,
பலவகையால் அகப் பற்றுறச்"

செய்தான். இங்ஙனம் அவருடைய மனத்தில் படிந்த பாசி, படிப் படியாக வளர்கிறது; கண்ணன் வளர்க்கிறுன். சீடனுக வந்த கண்ணனிடம் அவர் இன்னது செய்திடேல், இவரோடுபழகேல், இவ்வகை மொழிந்திடேல் என்று பலவகை உபதேசங்களைக் கூறுகின்ருர் இவையாவும் செவிடன் காதில் சங்கு ஊதியது போல அமைந்தன. அவன் அவர்கூறும் நெறியினுக்கு எல்லாம் எதிர் செய்வானுயினுன். நடப்பானுயினுன். இவை, பாரதியின் மனத்தில் வெறுப்புத்தீயை வளர்த்தன இது ஏற்கனவே படிந்த மாசில் இன்னும் சிறிது மாசைப்படியவைத்தது.

பாரதியார் கண்ணன் மேல்கொண்ட அன்போ சொல்லுந் தரமன்று. உலகினர் அவனைப் பித்தன் என்று பேசியபோது அவருடைய உள்ளம் வேதனையால் வெந்தது. கண்ணனைத்திருத்திட அவர் நீதிகள் பலவும் தந்திரங்கள் பலவும், சாத்திரம் பலவும் சொல்லி, அவர் கண்ணனைத் துளைத்திட்டார்

"கண்ணனை நானும் காத்திட விரும்பி
தீயெனக் கொதித்தும் சினமொழி யுரைத்தும்
சிரித்துரை கூறியும், செள்ளென விழுந்தும்,
கேலிகள் பேசிக் கிளறியும், இன்னும்

எத்தனையோ வகையிலே என்வழிக் கவணைக்
கொணர்ந்திட முயன்றேன் கொள்பயன் ஒன்றிலை”

என்ற அவருடைய சொற்கள் கண்ணன்மேல் அவர்கொண்ட அன்பின் ஆழத்தைத் தெரிவிக்கின்றன. கண்ணனுக்காகப் பாரதியின் மனம் ஆற்றாமையினால் தவிக்கிறது. ஆனால் கண்ணனோ இதனை ஒன்றினையும் எண்ணவில்லை. அவன் பழைய படியே பித்தனைப்போல அலைகிறான். அதனால் பாரதி மனத்தில் எங்ஙனமேனும் கண்ணனை நல்வழிப்படுத்தியே தீரவேண்டும் என்ற வன்மம் ஏற்படுகிறது. இது அவரது உள்ளத்தில் வளர்ந்து வரும் அகந்தைத்தீக்குச் சிறிது நெய்வார்க்கிறது.

இவ்வாறு கண்ணனைத் திருத்த அவர் கையாண்ட முயற்சிகள் பயனில்லாமற்போயினும் பாரதி விடவில்லை. மேலும் கண்ணனைத்திருத்த வழிதேடுகிறார். சாம, பேத, தான, தண்டங்கள் கண்ணனிடம் விழலுக்கிறைத்த நீராக அமைகின்றன. இறுதியாகக்கண்ணனிடம் கண்ணா! உனக்காக அல்லாவிடினும், எனக்காக, என்மீது நீ கொண்டுள்ள அனபிற்காக வேனும்

“என்னை நீ துன்பம் எய்துவித் திடாமே
இவ்வுரைக்கு இணங்குவாய்”

என்று உள்ளம் நெகிழக் கண்ணனை வேண்டுகிறார். கண்ணனைத் தன்னுடன் சிறிதுநாள் தங்கவைத்து அதன்மூலமாக அவனை அழிவினின்றும் காக்கலாம் என்று நினைக்கின்றார். கண்ணனைத் தன்னுடன் தங்கும்படி வேண்டுகிறார். கண்ணனும் அதற்குக் “காரியம் ஒன்று காட்டுவைபாயின் இருப்பேன்” என்று தன்னுடைய சம்மதத்தைத் தெரிவிக்கிறான். பாரதியாரும் கண்ணனுக்குத்தன்னுடைய பாக்களைத் தினமும் பிரதியில் அழகாக எழுதும் பணியைக் கொடுக்கிறார். அதைக் கையிற்கொண்டு கண்ணன் ஓர் நாழிகைப் பொழுதே இருக்கிறான். பின்பு செல்வதற்காக எழுந்தான். அதைக்கண்ட பாரதி கடுங்கோபம் கொள்கிறார். இதுவே அவர்கள் உறவின் உச்சநிலை. பாரதி உணர்ச்சித் துடிப்பின் எல்லையில் தோன்றும் நிலை. உடலும் உள்ளமும் கொதிக்க நிற்கிறார் பாரதி. இருவர் உரையாடலிலும் சொற்கள் மிகுகின்றன. இறுதியில் பாரதி கண்ணனைப் பார்த்து,

"இத்தொழிலை இங்கே இப்பொழுதே எடுத்துச்
செய்கின்றனையா? செய்குவதில்லையா?
ஒருரை சொல்"

என்று கடுங் கோபத்துடன் வினவுகிறார். ஆனால் கண்ணனே இதையும் இலட்சியம் செய்யவில்லை. இறைவனான கண்ணன் தன்னுடைய செய்கைகள் முடிந்து, பாரதியை ஆட்கொள்ளும் நேரம். பாரதியின் மனத்தின் மாசுகளை நீக்கும் நேரம். எனவே அவன் 'இல்லை' என்று பாரதி கேட்ட கேள்விக்கு இமைக்கு முன் பதிலளிக்கிறான். இப்பதிலே பாரதியின் உள்ளுணர்வைத் தட்டி எழுப்புகிறது. அவருடைய ஆன்மாவை உணர்த்துகிறது. கண்ணனின் இப்பதிலைக் கேட்ட அவர் கண்ணனைப் பார்த்துப் "போ, போ, போ; என் கண் முன் நில்லாதே" என்று சீறுகிறார். ஆனால் கண்ணன் போவதையே விழிநீர் சோரப் பார்த்துக் கொண்டே நிற்கிறார். உள்ளம் உருகும் நிலையில்தான் இறைவனை உணரமுடியும். "நீராய் உருக்கி, என் ஆருயிராய் நின்றானே!" என ஒரு பக்தர் அழைக்கிறார். கண்களில் இருந்து வடிந்த நீர் இதுவரை அவரிடம் படிந்த மாசுகளைக் கழுவிச் செல்கிறது. பாரதி தூய்மை வடிவாகிறார். "எவ்வகையாயினும் கண்ணனை நேருறக்கண்டே தீர்ப்பேன்" என்று கர்வம் கொண்டிருந்த அவருடைய உள்ளம், இறுதியில் "நின்தனைச் செம்மை செய்திடக் கருதி ஏதேதோ செய்தேன் தோற்றுவிட்டேனடா" என்று வருந்தும் அளவிற்கு அமைந்துவிடுகிறது. 'தோற்றேன்' என்று அவர் கூறும் வாக்கு, அவரது மலங்களை அகற்றி, அவருக்கு வெற்றியைத் தேடிக்கொடுக்கிறது ஒன்றை ஆக்குதல் மாற்றுதல் அழித்திடல் எல்லாம் தன் செயலன்று என்பதை உணர்கிறார். இத்தகைய விளக்கம் தந்து நிற்கிறது பாரதியின் இப்பாடல்.

இறைவனது தன்மைகளையும் இவர் ஆங்காங்கே அழகுறச் சுட்டிச் செல்கின்றார். இறைவன் எல்லா உயிர்களிடமும் அடங்கியுள்ளான். காண்பன எல்லாம் இறைவனாகத் தோன்றும் அடியார் கண்களுக்கு. பாரதியாரும் கண்ணனை,

"எவ்வகைப் பயனிலும் கருத்திழந்தவனாய்
குரங்காய்க் கரடியாய்க் கொம்புடைப் பிசாசாய்
யாதோ பொருளாய் எங்ஙனே நின்றான்"

எனக்கூறி, அவன் தன்மைகளைச் சொற்களால் அளவிட முடியாது என்பதனையும் சுட்டுகிறார்.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே''

என்ற மணிவாசகர் வாக்கையும் நமக்கு நினைவூட்டிச் செல்கிறார்.

இறைவன் விருப்பு வெறுப்பற்றவன். எல்லா உயிர்களும் அவனுக்கு ஒன்றே. அவனிடம் பாரதி, 'இன்னவர் உறவுகொள், இன்னவை விரும்புவாய்' என்று தருமம் எடுத்தோதுகிறார். 'தருமம் எடுத்தோதி' என்று கூறும் போதே அவர் கூறிய சொற்களின் பொருளை அவரே இகழ்ந்துகொள்கிறார். இன்னும் ஓர் இடத்தில், 'கண்ணனை நானும் காத்திட விரும்பி' என்று தன்னுடைய மனநிலையை விளக்கும் போதே, 'கண்ணனை நான் காப்பதாவது, அவன் அல்லவா நம்மைக் காத்துக் கொண்டிருக்கிறான் என்ற தொனி' எழக் கூறுவதைக் கேட்கிறோம்.

தற்கால மக்கள் உழைக்கத் தயங்குபவர்கள். இயந்திரங்கள் மூலம் எல்லா வேலைகளையும் செய்து, பிறர் உழைப்பாலே தான் வாழ விரும்பும் மக்கள் நிறைந்த உலகம் இது. அவர்களுக்காகத்தான் விவேகானந்தர், 'கடமையை ஒழுங்காகச் செய். அது தான் நீ இறைவனை வணங்குவதன் பயன்' என்று கூறி அறிவுறுத்தினார். 'காந்தியடிகளும், 'தன்கையாலே உழைத்து வாழப் பழகிக் கொள்' என்று வழிகாட்டினார். கவிமணியும் ''நாடிப் புலங்கள் உழுவார் கரம் கலைமகளின் இருப்பிடம்'' என்று உழைப்பின் பெருமையைக்கூறினர். பாரதியாரும் கண்ணன் வாயிலாக இதை எடுத்துக்கூறுகிறார், கண்ணனைத் தன்னுடன் தங்கும்படிக் கூறியபோது அதற்குக் கண்ணன் ''நின்னிடத்தே தொழில் இல்லாது யாங்ஙனம் சோம்பரில் இருப்பது? காரியம் ஒன்று காட்டு வையாயின் இருப்பன்'' என்று உறுதியாகப் பதிலளிக்கிறான். உழைப்பிலேதான் இறைவன் என்ற கருத்தை இங்கே மிக அழகாகச் சுட்டுகிறார். இவ்வாறு நவில்தொறும் நூல் நயம் போன்று, பயிலப் பயிலப் புதுக்கருத்துக்களை உணர்த்தி நிற்கிறது பாரதியார் அளித்த இப்பாடல்.

பைந்தமிழ்க் காவலர் பாசுகர சேதுபதி நூற்றாண்டு விழா

[குறிப்பு: சேது காவலராக மட்டுமன்றிச் செந்தமிழ்க் காவலராகவும் விளங்கிய சேதுபதிகளின் செழுங்குடியில் தோன்றியவர் அமரர் பாசுகரசேதுபதி. அவர், பாடிவந்த புலவருக்கும், நாடிவந்த கலைஞர்க்கும் கோடியெனச் செம்பொன் கொடுத்து உதவிய கொடைவள்ளல். மண்ணும் விண்ணும் கடந்துநிற்கும் இறைவனின் திருக்கோவில்களுக்குப் பொன்னும் மணியும் புனைந்த ஆயிரமாயிரம் அணிகலன்களை அள்ளி வழங்கிய அருளாளர். இந்தியப் பண்பாட்டினையும், இந்துமதப் பெருமைகளையும் உலகச் சமயங்களின் மன்றத்தில் உலகோரறிய உரையாற்றும் வண்ணம் சுவாமி விவேகானந்தரைப் பெரும் பொருட் செலவில் அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்த ஆன்றோர். பைந்தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் மதுரை மூதூரில் தமிழ்ச் சங்கத்தை நிறுவியஞான்று உற்றுழி உதவிஉறுபொருள் கொடுத்த உரவோர். இத்தகு நல்லாரின் நூற்றாண்டு விழா 1968 நவம்பர் 1, 2, 3 ஆகிய நாட்களில் முத்தமிழ் விழாவாக முகவையம்பதியாம் இராமநாதபுரத்தில் மிகச் சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. அதனை யொட்டிப் பின்வரும் சில பகுதிகள் இவ்விதழில் வெளியிடப்படுகின்றன.]

வள்ளல் பாசுகரசேதுபதியவர்கள் தம் 36-ஆம் ஆண்டில் (1903) கல்லிடைக்குறிச்சியில் திடுமென இயற்கை எய்திய பொழுது, அவருடனிருந்த திரு. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் வருந்திப் பாடிய இரங்கற் பாக்கள்:-

"என்னுவி யுளங்குளிர அண்ணுவென்
றன் பொடினி யெனையார் சொல்வார்
மன்னுமன் னுமென்னு வெனயாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்

பொன்னாடுந் தொழுஞ்சேது நன்னாடு
புரந்தளிக்கப் போந்த நீவே(று)
எந்நாடு சென்றனையோ எங்கள்குல
மணிவிளக்கே! இசைத்தி டாயே''

"பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு
தியஞான்று பரிவு கூர்ந்து
நண்புலவு திருவாக்கால் தளர்வொழிகென்
றெனக்கிசைந்த நலம்பொய் யாதே
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை
யாதெனவே மதித்து வான்போய்
விண்புலவ ரோடுதம னியங்கொணர
விழைந்தனையோ வேந்த ரேறே"

ஆடுவது ஏனோ?

(கி. பழநியப்பன்)

எடுப்பு

ஆடுவது ஏனோ இறைவா—தில்லை
அம்பலத்தே நீ ஆனந்த நடனம் (ஆடுவது)

தொடுப்பு

தேடு மாலயன் திகைத்துப் பார்க்கவோ
பாடு மடியார்தம் பழவினை தீர்க்கவோ (ஆடுவது)

முடிப்பு

காரார் கடல்நஞ்சை யுண்ட தாலோ
கங்கையைச் சடைதனில் கொண்ட தாலோ
சீரார் திரிபுரத்தை எரித்ததனாலோ
சிவசக்தி வேலனைப் பெற்றதனாலோ (ஆடுவது)

பாசுகரசேதுபதி அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோள்

குறிப்பு:—சேதுபதி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நாட் குறிப்பினின்றும் எடுக்கப் பெற்றது.

(தங்கல்:— இராமேசுவரம்)

1893 சனவரி 13:— வாழ்க்கையில் எனது குறிக்கோள்:

1. கீழ்க்கண்டவைகளைச் செய்து முடிக்க வேண்டும்:— தங்கக் கோபுரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மணிக் கூண்டு, சுற்றியுள்ள மண்டபம், மூலத்தானத்தில் சந்தனப் பலகைகள் அமைத்தல், கருங்கல் பீடத்திற்கு வெள்ளிக் கவசம் செய்தல், படிக்கட்டுகளுக்கு வெள்ளிக் கவசம், சந்தனக் கட்டையினல் கதவுகள், வெள்ளிச் சரவிளக்கு மணிகள், இரத்தினக் கவசம் முத்துக்கிரீடம், நாள் திட்டத் திற்கும், நவராத்திரித் திட்டங்களுக்குமாகக் கிராமங்களை அறக்கட்டளையாகத் தருதல், சிங்க வாகனமும், சிம்மாசன வாகனமும் செய்தல், இராசேசுவரி மண்டபத் திருப்பணி செய்தல் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும்.

2. சக்தி தந்திரம் கற்றுப் பயிற்சி செய்ய வேண்டும்.

3. இராமேசுவரம் கோவிலைப் பொறுப்பேற்று நான்கு திருமதில் களைச் செப்பனிட்டு, மேலைக் கோபுரத்தைப் பழுதுபார்த்துப் பெரிய திருச்சுற்றுவெளிக்குத் தளவரிசை போட வேண்டும். சுவாமிக்கும், அம்மனுக்கும் தங்க விமானங்கள் அமைக்க வேண்டும்: எல்லா வாகனங்களையும் வெள்ளி யினுற் செய்து, கும்பாபிடேகமும் செய்ய வேண்டும்.

4. நயினர் கோவிலிலுள்ள இரண்டு கோயில்கள், உத்திர கோசமங்கை, திருச்சுழி, திருவாடானை, திருப்புல்லணை (திருப்புல்லணி) பெருவயல், கோதண்டஇராமசாமி, சொக்க

நாத சுவாமி கோவில் ஆகியவற்றின் கும்பாபிடேகங்களைப் பார்க்க வேண்டும்.

5. மதுரைத் தேரைப் பூர்த்தி செய்ய வேண்டும். காஞ்சிபுரம் விமானம், கருவையம்பட்டிக் கும்பாபிடேகம், திருச்செந்தூர்ச் சண்முக விலாசம், கூடலழகர் கோயில் கும்பாபிடேகம் முதலியன செய்ய வேண்டும்.

6. அம்மன் கோவிலில் எனது சிலையொன்றை அமைத்துக் கோவில் மரியாதைகள் செய்ய வழிவகுக்க வேண்டும். இராமேசுவரத்தில் புதிய கல்யாண மண்டபம் அமைப்பதுடன் சிதம்பரம், மதுரை, கூடலழகர் கோவில், திருச்செந்தூர், காஞ்சிபுரம் முதலிய இடங்களிலும் இவ்வாறே மண்டபம் அமைக்க வேண்டும்.

7. மதுரைக் கோவிலில் சித்தருக்கு அணிகலன்கள் செய்ய வேண்டும்.

8. இராமநாதபுரத்தில் பாசுகரேசுவரர் கோவிலைக் கட்டி முடிக்க வேண்டும்.

9. காசியில், சத்திரம் ஒன்று கட்டவேண்டும்.

10. தனுசுக்கோடியில் சத்திரம் ஏற்படுத்தி, அதற்குக் கட்டளை அமைக்க வேண்டும்.

11. அக்கிரகாரம் ஒன்று அமைக்க வேண்டும்.

12. ஒரு குளமும், கிணறும் வெட்ட வேண்டும்.

13. தோப்பு ஒன்று அமைக்க வேண்டும்.

14. பசுக்கள் மேய்வதற்காகப் புல்வெளிகளை ஏற்படுத்த வேண்டும்.

15. மதுரையில் பிராமணர் அல்லாத மாணவர்க்கென ஒரு விடுதி அமைக்க வேண்டும்.

16. குறைந்த அளவு, பன்னிரண்டு பழமையான வடமொழி நூல்களையும், பன்னிரண்டு தமிழ் நூல்களையும் அச்சிட வேண்டும்.

17. சங்கராச்சாரியாரை அழைத்து இராமலிங்க விலாசத்தை ஆசீர்வதிக்கச் செய்ய வேண்டும்.

18. மகோதய காலத்தில் தனுசுக்கோடியில் குடும்பத்துடன் கடலில் நீராட வேண்டும்.

19. ஒரு அர்த்தோதயமும். மகாமகமும் பார்க்க வேண்டும்.

20. காசி, பிரயாகை, கங்கை, சேது முதலிய தலங்களுக்குப் பயணம் சென்று, ஆங்காங்குள்ள தீர்த்தங்களில் நீராட வேண்டும்.

21. இரணிய கர்ப்பம் செய்ய வேண்டும்.

22. அரண்மனைக் கடன்களைத் தீர்க்க வேண்டும்.

23. இராமேசுவரத்திலும், இராமநாதபுரத்திலும் அரண்மனைகளைப் பழுது பார்க்க வேண்டும்.

24 மகாராணியின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்திற்கு ஒரு முறை போக வேண்டும்.

25. அமெரிக்காவிற்குச் செல்ல வேண்டும்.

26. சென்னைப் பல்கலைக் கழக அவையில் உறுப்பினராக வேண்டும்.

27. தமிழ்ச்சங்கம் ஒன்று அமைக்க வேண்டும்.

28. ஏதாவதொரு சட்டசபையில் உறுப்பினராக வேண்டும்.

29. குறைந்தது H. C. T. E. பட்டம் பெற வேண்டும். மகாராசா எனும் சிறப்புப் பட்டமும் பெற வேண்டும்.

30: அரச குடும்பத்தினருக்கு மதுரையில் வரவேற்புக்கொடுக்க வேண்டும்.

31 என் அன்னையாருக்கு இறுதிச்சடங்கு செய்யும் பேற்றினைப் பெற வேண்டும்.

32. எனது சகோதரர் பாண்டித் துரைக்கு முன்பே நான் துன்பமில்லாமல் இறக்க வேண்டும்.

33. இறக்கும்போது நான் ஆண்டவனை நினைத்துக்கொண்டிறக்க வேண்டும்.

மொழியாக்கம்:- திரு. கி. பழநியப்பன் (சங்கச் செயலர்)

சங்கச் செய்திகள்:

சங்கச்செயலர் திரு. கி. பழனியப்பபிள்ளையவர்கள் மணி மங்கல விழா

—○—

இச்சங்கத்தில் செயலராகப் பணிபுரிந்து வரும் திரு. கி. பழனியப்பபிள்ளையவர்களைத் தமிழகம் நன்கறியும். மதுரையில் நடந்த மாபெரும் விழாக்களான முத்தமிழ் விழா, தமிழ்ச்சங்கப் பொன்விழா, மீனாட்சி கோவில் திருப்பணி விழா, மதுரைத் திருவள்ளுவர் கழக வெள்ளி விழா முதலானவற்றில், நம் சங்கத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன் அவர்களுடன் பெரும் பங்குகொண்டு வெற்றிகரமாக நடாத்தி முடித்த சிறப்பு நம் சங்கச் செயலருக்கு உண்டு. இவர்கள் இச்சங்கத்தை தற்போது நன்முறையில் இயங்கி வரும் செந்தமிழ்க் கல்லூரியின் தோற்றத்திற்கு உறுதுணையாய் இருந்ததுடன் இதன் ஆக்கத்திற்கும் அரும்பாடுபட்டு வருகின்றனர். 'நாளும் நற்றமிழ்த் தொண்டே நமக்குரியது'! எனக்கொண்டொழுகும் இப்பெரியாரவர்களின் 60-ஆவது ஆண்டு மணிமங்கல விழா, நம் சங்கத்தில் 12-12-68 வியாழக்கிழமையன்று மிகச் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

அன்று முற்பகலில் நடந்த பாராட்டு விழாவிற்குக் கல்லூரித் துணைத் தாளாளர் திரு. சீ. சுந்தரவரதன் அவர்கள் தலைமை தாங்கினர். வந்திருந்தோரை மாணவி வெ. தனலக்குமி வரவேற்றபின் மாணவர்களான சு. போசு, ந. சுந்தரசீனிவாசன், சோமன், செயராய்காந்தி, சௌந்தரராசன், பொ. மணி, கோவிந்தசாமி, முதலானோரும், மாணவிகளான சு. சீதாலக்குமி, தனலக்குமி, சகதாம்பாள், செயலக்குமி, விசாலாட்சி, ஆலீசு வசந்தகுமாரி, குருவம்மாள், அருள் ரஞ்சிதம் முதலானோரு

கவிதைகளாலும், உரைநடையாலும் செயலரைப் பாராட்டினர். பழைய மாணவர் சார்பில் திரு. பிச்சாண்டி பாராட்டினர். கல்லூரிப் பேராசிரியர்களான திரு. அ. மு. கருணையானந்தா, திரு. வி. சி. சீனிவாசன், திரு. மு. உலகநாதன், திரு. ச. சாம்பசிவன் ஆகியோர் உரைநடையாலும், வாழ்த்துப் பாக்களாலும் செயலர் தொண்டுகளைப் புகழ்ந்தனர்.

தலைவர் தம் முடிவுரையில், தமக்கும் செயலருக்கும் உண்டான நட்பின் திறம் பற்றியும், செயலரிடத்தமைந்த அருங்குணங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். செயலரவர்கள் பாராட்டுதலுக்கு மறுமொழி கூறிய பின், மாணவர் செயபால சண்முகம் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

பிற்பகல் நிகழ்ச்சி தேநீர் விருந்துடன் தொடங்கியது. சங்கத் தலைவர் தமிழவேள் திரு பி. டி. இராசனவர்கள், விழாவுக்குத் தலைமை தாங்கினர் வந்திருந்தோரைக் கல்லூரி முதல்வர் திரு இரா. வே. நாராயணன் வரவேற்றபின், ஆசிரியர், மாணவர், அலுவலர்கள் சார்பில் செயலக்குருக்குத் தலைவரவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தனர். பேராசிரியர் திரு. அ. மு. கருணையானந்தா, அனைவர் சார்பிலும் வாழ்த்துப்பா படித்துக் கொடுத்தார். மாணவர்கள் சார்பில் செயபாலசண்முகமும், மாணவிகள் சார்பில் மாலதிபாயும் பேசினர். சங்க ஆட்சிக் குழு உறுப்பினர்களான திருவாளர்கள் பி அரங்கசாமிநாயுடு ஏ. பி. முகமது சுல்தான், சி. சுந்தரவரதன் முதலானோர் பாராட்டுரை பகர்ந்தனர். தலைவர் தமிழவேளவர்கள், செயலர் தொண்டுகளைப் பலபடப் பாராட்டினர். சங்கச் செயலர் திரு கி. பழனியப்பபிள்ளையவர்கள், தக்க வகையில் மறுமொழி கூறியபின், ஆசிரியர் திரு. ச. சாம்பசிவன் நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர்

உயர்திரு. கி. பழநியப்பனார் அவர்களின்

60-ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது (12—12—68)

செந்தமிழ்க் கல்லூரி

ஆசிரியர்களும், அலுவலர்களும், மாணவர்களும்

மனமுவந்து வழங்கிய

வாழ்த்துப்பா

"திருமகள் கலைமகள் சிறந்திடக் தொண்டர்
அருள்தரும் சங்கத் தருமைச் செயலீர்
வள்ளுவர் கழக வாய்ப்புத் தலைவரீர்
உள்ளுவ அனைத்தும் உயர்வே உள்ளுவீர்
சொல்லுவ அறிந்து சொல்லிடும் தோன்றலீர்
ஒல்லுவ அறம்பல உஞற்றிடும் சான்றீர்
கடவுள் மனம்பெருக் கடமைகள் இல்லை
கடமையும் மக்களின் கவிஞர் செயலே
என்பதை நினைந்தே இன்பெலாம் எய்திடும்
அன்புப் பழநி யப்பரீர் வாழ்க
அற்ப தாண்டும் அமைவுறப் பெற்றீர்
தமிழவேள் முருகன் தண்ணருட் பாங்கால்
தமிழவேள் திருவுளம் தங்கிடப் பெற்றீர்
பாண்டிய நாட்டின் பழந்தமிழ் மதுரையில்
பாண்டித் துரையார் பாரெலாம் போற்றிடும்
தமிழ்ச்சங் கத்தினைத் தந்தனர் அவர்தம்
அமிழ்தச் சங்கத் தாருயி ரானீர்
விவேகா னந்தரின் வீறுசால் வாழ்வால்
விவேக மணியென விளங்கிடும் தகையீர்
பிரம்ம மாவெனும் பெருமாட் டியரின்
வரந்தரும் இனியநல் வாழ்க்கைத் துணைவரீர்

மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர்
திரு. கி. பழநியப்ப பிள்ளையவர்கள் மணி விழா
தமிழவேள் திரு. பி. டி. இராசனவர்கள் பொன்னுடை
போர்த்தும்போது எடுக்கப்பெற்றது.



திருவாசகமணி
திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களது
மணி விழாவின் போது எடுக்கப்பெற்றது.

நற்பெருங் குணத்தினர் நன்மக்கள் அறுவரைப்
பொற்புடன் பெற்றதால் "புகழ்பெறும் தந்தையீர்
மனிதரில் சிறந்திடும் மாணிக்கம் எனவளர்
இனியராம் பேரன்மார் ஏற்றமும் பெற்றீர்
"உலகச் சமய நூல்" ஒப்பருங் குறளென
இலகிடத் தந்திடும் ஏந்தலீர் வாழ்க!
பொதுநலச் சமயப்" புண்ணியப் பணியுடன்
எதுநலம் சங்கம் ஏற்றம் பெறற்கென
எண்ணிய உடன்செயும் இணையிலாக் குரிசிலீர்
பண்ணினும் இனிய பைந்தமிழ்ப் பாடலும்
கண்ணினும் இனிய கட்டுரைக் கோவையும்
தண்ணிய செந்தமிழ் தழைத்திடத் தந்தீர்
மணிவிழாக் கண்டீர் மாண்புறப் போந்திடும்
அணிவிழா வதனையும் அன்றுநாம் காண்பேம்.
இன்றும் அன்றும் என்றும் இருந்தருள்
ஒன்றும் பரத்தினை உன்னி வாழ்த்துதும்!
வாழிய நீவிர் வையை மணலினும்
ஊழி பலவும் உவந்து வாழியவே"

கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்

பண்டிதவித்துவான் திரு. ச. சாம்பசிவன் அவர்கள்

பாடிக் கொடுத்த

வாழ்த்துப்பா

நிலைமண்டில ஆசிரியப்பா

மலர்தலை உலகாம் மங்கைநல் லாளின்
தலையெனத் திகழ்வது தண்டமிழ் நாடே!
மண்டிலம் புகழும் மதுரைமா நகர்தாம்
கண்ணெனக் காட்சி வழங்குதல் கண்டோம்
இந்நகர் தன்னில் எவரும் போற்றும்
பன்னலம் மிக்க பண்பார் குரிசில்

வருந்தி வந்தவர்க் கரும்பசி களைந்து
விருந்து போற்றும் வேளாண் குடியில்
கிருட்டிண பிள்ளையின் கொழுந்தெனத் தோன்றிய
அருட்டிரு பழநி யப்பர்! அவர்தாம்
வள்ளுவர் நெறியே வாழும் நெறியெனச்
சொல்லவுஞ் செய்வார்; சொல்லிய வண்ணம்
செய்யவும் வல்லார்; செயமுடி யாவிடில்
சொல்லவுஞ் செய்யார்! சோர்விலாத் தொண்டர்!
கொடுப்பதி லுயர்ந்தவன் குமணன் என்பார்
படிப்பதில் வல்லவன் பாரி என்பார்
மன்னரை நேரிற் கண்டோ மில்லை!
அன்னவர் போல அண்டையில் வாழும்
வழிவழி வந்த வண்டமிழ்க் குடியினர்
பழியொடு படராப் பண்பிற் சிறந்தவர்
தமிழர் வேளெனும் தகவுறு நல்லார்
தமிழ்ச்சங் கத்தின் தலைவரா யமர்ந்தார்!
தலைவருக் கேற்ற தகைசால் அமைச்சர்
அலைபாய் செந்தில் அறுமுகப் பெயரை
இயல்பாய்க் கொண்ட இன்றமிழ்க் காவலர்
நயமாய்ப் பேசும நல்லுரை யாளர்!
நான்காம் சங்கம் நாளும் வளரப்
பாங்கான வழிகள் பலவும் செய்வார்
முத்தமிழ் முழங்கும் மூதூர் மதுரையில்
முத்தமிழ் விழாவை முறையாய் நடாத்திய
வித்தகச் செல்வர்! விவேகா னந்தரை
மெத்தவே போற்றும் மேலான பண்பினர்!
தமிழ்வழு பாடு தகவுடன் நடக்க
வழிபல வகுத்த வாய்மை யாளர்!
காத லாகிக் கசிந்துநீர் மல்கும்
ஓது வார்க்குநல் உயர்வு தந்தவர்
பலரும் போற்றும் பழமுதிர் சோலை
மலையின் ஓர்பால் மலைகிழ வோனுக்
கணிவிழாக் கண்ட அருஞ்செயல் வீரர்!
மணிவிழாக் காணும் மங்கலப் பெரியார்!

மாண்புடன் பழகும் மாணவ நண்பர்!
அன்புமீக் கூர்ந்த ஆசிரியத் தோழர்!
கள்ளம் இல்லாப் பிள்ளைக ளிடத்தில்
உள்ளம் உவக்க உரையா டிடுவார்!
இதழா சிரியர்! இன்றமிழ்க் கவிதை
பதமாய்ப் பாடும் பாவலர்! நாவலர்!
எத்திற மாயினும் எதுவா யிருப்பினும்
சித்திரம் வரைவார் சிரிக்கப் பேசுவார்!
சாத்திரம் கற்பார் சாதிகள் பேசார்
தோத்திரம் செய்வார் தொண்டில் உயர்ந்தார்
பத்தரை மாற்றுத் தங்கம் எனினும்
இத்தரை மீதில் இவர்க்கிணை யுண்டோ?
வானுற விளங்கும் வள்ளுவர் கழகம்
மாண்புடன் திகழ மாசிலாப் பணிகள்
ஆற்றிய புரவலர்! அவர்தம் புகழைச்
சாற்றுதல் எளிதோ? சாற்றுவீர் நீரே!
அங்கயற் கண்ணி அவளுடன் அமர்ந்த
மங்கை மணாளன் மலரடி போற்றி
ஆழிசூழ் உலகில் அளவிலா ஆண்டுகள்
வாழ்க வென்றே வாழ்த்துவம் யாமே!

பிள்ளைத் தமிழ் வெளியீட்டு விழாவும் மணி விழாவும்

திருவாசகத்தையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் எழுதி அரும்புகழ் கொண்ட திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் மணி விழாவும், அவர்கள் இயற்றிய 'திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்', நூல் வெளியீட்டு விழாவும், இச்சங்கத்தில் 13-12-68 வெள்ளிக்கிழமை மாலை மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன. சங்கச் செயலர் திரு. கி. பழனியப்பபிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றனர். விழாவிற்குச் சங்கத் தலைவர் தமிழவேள் திரு. பி. டி. இராசன்

அவர்கள் தலைமை தாங்கித் திருவாசகமணி செய்த தொண்டுகளையும், தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமைபெற்ற அவரது தகைமையினையும் பாராட்டியதுடன் பொன்னுடையும் போர்த்திச் சிறப்பித்தனர். பின்னர்த் திரு. பி. அரங்கசாமி நாயுடு, திரு. ஏ. பி. முகமது சுல்தான், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, திரு. ரம்போலா மசுகரேனசு (திருச்சி) ஆகியோர் பாராட்டுரை பகர்ந்தனர். ஆசிரியர் திரு. அ. மு. கருணையானந்தா சங்கச் சார்பில் வாழ்த்துப்பாவினைப் படித்துக் கொடுத்தார். கல்லூரி முதல்வர் திரு. இரா. வே. நாராயணன் வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார். திருச்சித் தமிழ்ச்சங்கச் சார்பில் அதன் செயர் திரு. பெரியசாமி அவர்கள் திருவாசகமணிக்குப் பொன்னுடை போர்த்தினர். திருவாசகமணி அவர்கள் தமக்களித்த இப் பாராட்டிற்கு மிக்க மகிழ்ச்சி தெரிவித்ததுடன், தாம் செய்த தொண்டுகள் குறித்தும் விளக்கிப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. A. வெங்கடேசுவர ஐயர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது,

திருவாசகமணி

உயர் திரு. கே.எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல்., அவர்களின்
அறுபதாண்டு நிறைவு மணி விழாவில் (13—12—68)
மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் மனமுவந்து வழங்கிய

வாழ்த்துப்பா

—)-ஃ-(—

திருவா சகமணிச் சிறப்புப் பெயரீர்!
அருள்வா சகநா அழகுறப் பெற்றீர்
இருள்வா சகனயால் இவ்வுல கத்தினர்
மருள்வா தித்திட மயங்கினர் பல்லோர்
அவரெலாம் உணர்வுற அரனுர் உண்மைத்
தவமுட் டொண்டர் சைவநம் சமயப்

பணியெலாம்	புரிந்தீர்	பாவலர்	நாவலர்
அணிவழக்	கறிஞர்	அனைவரும்	வியந்திடப்
பேசாத	நாளெலாம்	பிறவா	நாளென
ஏசாத	வகையில்	இன்புறப்	பேசுவீர்
திருவா	சகத்துடன்	திருக்குறள்	அறமும்
மருவா	உலகமும்	மாசுறும்	உலகமே
என்று	நினைந்தீர்	எங்கணும்	சென்றீர்
நன்றெலாம்	புரிந்திட	நாடெலாம்	திரிந்தீர்
திருவா	சகத்தேன்	திருக்குறள்	அமுதினை
அருளுள	தாயென	ஆங்கில	மொழியரும்
பருகிட	உருகிடப்	பாங்குற	அளித்தீர்
இயற்கைக்	கடமையர்	எம்விவே	கானந்தர்
செயல்புரி	திரரீர்	செந்தமிழ்ச்	செல்வரீர்
சிவமணங்	கமழ்தரத்	தென்னுப்	பிரிக்காத்
தவநாடு	சென்றீர்	தத்துவ	விளக்க
நவந்தரும்	அற்புத	நல்லதோர்	வகையாம்
சொற்பெருக்	காற்றினீர்	சுடர்தரும்	இந்தியத்
தமிழகம்	மேலும	சால்புற	நினைந்தீர்
வள்ளுவர்	பெயரால்	வாய்மை	விளங்கிடப்
பிள்ளைத்	தமிழ்நூல்	பெட்புடன்	பாடினீர்
உள்ளச்	சாந்தியே	ஒருவர்தம்	வாழ்வில்
கொள்ளை	யின்பம்	கொடுத்திடல்	காண்போம்
ஆண்டின்	நிறைவால்	அருட்குணம்	படைத்தார்
வேண்டிய	நலமெலாம்	விழைந்திடப்	புரிவார்
ஆசுவின்	அமைதி	அவர்க்கும்	உண்டுகொல்?
பெரியீர்!	மேலும்	பிறைமுடிக்	கண்ணிப்
பெரியோன்	திருவருட்	பெருந்துணை	கொண்டே
பிணியறி	யாவுடல்	பெற்று	வாணாளும்
நனியுறப்	பெற்று	நல்லன	புரிந்திட
மனமுவந்	தேநாம்	மகிழ்ந்து	வாழ்த்துதுமே!

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

1969–தமிழ்த் தேர்வுகள்

வகுப்பு	தேர்வு நாள்	தேர்வு நேரம்
S. S. L. C.	25—1—69 (சனிக்கிழமை)	
முதற்றாள் (I Paper)		காலை 10—12-30
இரண்டாந்தாள் (II Paper)		மாலை 2—4-30
பயிற்சிப் பள்ளி	25—1—69 (சனிக்கிழமை)	
முதியோர், இளையோர் தொடக்கநிலை, இடைநிலை		காலை 10—12
P. U. C.	1—2—69 (சனிக்கிழமை)	
முதற்றாள் (I Paper)		காலை 10—1
இரண்டாந்தாள் (II Paper)		மாலை 2—5
சிறப்புத்தமிழ் (Adv)	3—2—69 (திங்கட்கிழமை)	காலை 10—1
B.A., B.Sc.	1—2—69 (சனிக்கிழமை)	
முதற்றாள் (I Paper)		காலை 10—1
இரண்டாந்தாள் (II Paper)		மாலை 2—5
	3—2—69 (திங்கட்கிழமை)	
மூன்றாம் தாள் (III Paper) (மொழிபெயர்ப்பும் இலக்கிய வரலாறும், கட்டுரையும்)		காலை 10—1

தனித் தமிழ்த் தேர்வுகள்–1969

நுழைவு—இளம்புலவர்—புலவர்

தேர்வு அட்டவணை

நாள்	கிழமை	நுழைவு காலை	இளம்புலவர் மாலை	புலவர் காலை
13—3—69	வியாழன்	செய்யுள்-1	இலக்கியம்-1	இலக்கியம்-1
14—3—69	வெள்ளி	செய்யுள்-2	இலக்கியம்-2	இலக்கியம்-2
15—3—69	சனி	நன்னூல்	கட்டுரை	கல்வெட்டு
17—3—69	திங்கள்	———	இலக்கணம்-1	இலக்கணம்-1
18—3—69	செவ்வாய்	———	இலக்கணம்-2	இலக்கணம்-2
19—3—69	புதன்	———	வரலாறு	மொழி வரலாறு

நேரம்:— காலை 10 மணி முதல் 1 மணி வரை.
மாலை 2 மணி முதல் 5 மணி வரை.

தேர்வு இடங்கள்:-

(1) மதுரை : தமிழ்ச் சங்கம், தமிழ்ச்சங்கத்தெரு, மதுரை.

(2) மார்த்தாண்டம்: கிறித்தவக் கல்லூரி, மார்த்தாண்டம். (கன்னியாகுமரி மாவட்டம்)

(3) திருப்பனந்தாள்: K. V. S. செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள். (தஞ்சை மாவட்டம்)

(4) மோகனூர் : சுப்பிரமணியம் தமிழ்க் கல்லூரி, மோகனூர். (வழி) நாமக்கல். (சேலம் மாவட்டம்)

மதுரை,
24—12—68

கி. பழநியப்பன்,
செயலர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

திருவள்ளுவர் 2000 ஆண்டு விழா

திருக்குறட் போட்டி

திருவள்ளுவர் 2000 ஆண்டு விழா வரும் தைத் திங்கள் 4-ஆம் நாள் (17-1-1969) வெள்ளிக்கிழமை உலகமெங்கும் சிறப்பாகக் கொண்டாட இருப்பதை முன்னிட்டு மதுரைத் தமிழ்ச் சங்கம் இப்போட்டித் திட்டத்தை அறிவிக்கின்றது.

கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளிமாணவ-மாணவிகள் அனைவரும் யாதொரு கட்டணமும் இல்லாது இப்போட்டியிற் கலந்து கொள்ளத் தகுதியுடையவர்களாவர்:

(1) கல்லூரி மாணவ-மாணவிகளுக்குக் கட்டுரைப் போட்டி

"மக்கள் ஆட்சி முறையில் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை எவ்வகையில் எந்த அளவு எவ்வாறு கடைப்பிடித்தல் வேண்டும்" என்பது பற்றி 5 பக்கங்களுக்குக் குறையாமலும் 7 பக்கங்களுக்கு மேற் போகாமலும் கட்டுரை எழுத வேண்டும். (முதற் பரிசு-பொற்பதக்கம்; இரண்டு, மூன்றும் பரிசுகள்-வெள்ளிப் பதக்கங்கள்; அடுத்து ஐந்து பரிசுகள் நூல்கள்).

(2) உயர்பள்ளி 9,10,11-ஆம் வகுப்பு, பயிற்சிப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஓவியப் போட்டி.

ஏதேனும் ஒரு திருக்குறட் கருத்தை விளக்கும் வகையில் ஓவியம் வரைய வேண்டும். 15 × 10 அங். அளவுள்ள நல்ல காகிதத்தில், நீர் வண்ணம் (Water Colour), மெழுகு வண்ணம் (Crayons)

குச்சிவண்ணம்(Colour Pencils) ஆகியவற்றில் எதையேனும்பயன் படுத்தலாம். ஓவியத்தின் அடியில் அதற்கான திருக்குறளையும் பின்புறம் எழுதியவர் பெயரையும், கல்வி நிலைய முகவரியையும் எழுத வேண்டும்.

(முதற் பரிசு – பொற்பதக்கம்; இரண்டு, மூன்றும் பரிசுகள் – வெள்ளிப் பதக்கங்கள்; அடுத்து 5 பரிசுகள் – நூல்கள்).

(3) 6, 7, 8-ஆம் வகுப்பு மாணவ - மாணவிகளுக்குக் கையெழுத்துப் போட்டி

ஏதேனும் 20 திருக்குறள்களைப் பிழையில்லாது, தெளிவாக, அழகாக மையினால் எழுத வேண்டும். எழுதும் காகிதம் 13×8 அங். அளவுள்ளதாக இருக்கவேண்டும்.

(50 பரிசுகள் – நூல்கள்)

மேற்கண்டகட்டுரைகள்,ஓவியங்கள், கையெழுத்துப்பிரதிகள் இவற்றை 15-1-1969 க்குள் செயலர், மதுரைத் தமிழ்ச் சங்கம், அஞ்சற்பெட்டி எண் 215, மதுரை-1 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இப்போட்டி பற்றிச்சங்கத்தார் அமைக்கும் குழுவின் முடிவே இறுதியானது.

குறிப்பு:— தனித்தனியாகவோ அல்லது பல மாணவர்கள் சேர்ந்தோ விடைகளை அனுப்பி வைக்கலாம். ஆனால் ஒவ்வொன்றிலும் மாணவர் பெயரும், கல்வி நிலைய முகவரியும் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சிறைக் கைதிகளுக்குத் திருக்குறள் ஓவியப் போட்டி

ஏதேனும் ஒரு திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஓவியம் வரைய வேண்டும். அவ் ஓவியம் திருக்குறட் கருத்தை நன்கு விளக்கும் வகையில் அமைய வேண்டும். நல்ல தாளில் நீர் வண்ணம் (Water Colour), மெழுகுவண்ணம்

(Crayons), குச்சி வண்ணம் (Colour Pencils) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம். ஓவியத்தின் அடியில் அதற்குரிய திருக்குறளை எழுத வேண்டும். பின்புறம் எழுதியவரின் பெயர், முழு முகவரி இவற்றை எழுதி 30—1—1969 க்குள், “செயலர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(முதற்பரிசு ரூ. 100,- இரண்டாம் பரிசு ரூ. 50- மூன்றும் பரிசு ரூ. 25,- மேலும் பத்துத் திருக்குறள் பரிசுகள்.)

மதுரைத் தமிழ்ச் சங்கம், இங்ஙனம்
மதுரை—1. கி. பழநியப்பன்,
15—12—1968. செயலர்

குறிப்பு:- இப்போட்டி நடத்துவதற்குச் சென்னைச் சிறைக்கூட உயர் அதிகாரி அவர்கள் (Inspector-General of Prisons) தம் S 3/68/11—12—68 அஞ்சல் மூலம் அனுமதியளித்துள்ளனர்.

திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்

(ஆசிரியர்: திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், வெளியீடு: ஆசிரியர் D/69, தில்லைநகர்-கிழக்கு, திருச்சி-3, பக்கம்: 156+142. விலை ரூ. 2)

கடவுளரையும், மன்னரையும். வள்ளல்களையும், ஆசிரியர்களையும் குழந்தையாகக் கற்பனைசெய்து, பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவம் ஒன்றுக்குப் பப்பத்துப் பாக்களாக நூறு பாக்களில் பிள்ளைத் தமிழ் பாடுவது மரபு. இம்முறையில் திருவாசகமணி அவர்கள் தெய்வப் புலவர் திருவள்ளுவர் மீது

பிள்ளைத் தமிழ் பாடியிருப்பது போற்றத்தக்கது. இந்நூலில் சொற்சுவை, பொருட்சுவை, சந்த இனிமை முதலான அழகுகள் அமைந்துள்ளன. தற்காலத்துக்கேற்ற புதுமைக் கருத்துக்களும் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன. ஆசிரியர், திருவாசகத்திலும், திருக்குறளிலும் தோய்ந்து தோய்ந்து இன்பம்பெற்றவராதலின், இவ்விரு பெருநூற் கருத்துக்கள் இப்பிள்ளைத் தமிழில் களிநடம் புரிகின்றன. திருவள்ளுவரை, "ஒப்பிலா மெய்ப்புகழினன், சிவஞான குரு, அறிவானந்தக் கடற்பிறந்த அமுது, செந்தமிழ் மொழிக் குழகன்" என்றும், திருக்குறளை "மனிதர்களையும் தேவராக்கும் வலிமைக் குறள், நற்றமிழ் மறை, காலத்தை வென்ற குறள், தென்றமிழ்க் கனியமிழ்தம்" என்றும் வியந்து போற்றுகின்றார். 'காசினியில் பிள்ளைத்தமிழ்க் கம்புலி புலியாம்' என்பது பிள்ளைத் தமிழில் வரும் அம்புலிப் பருவத்தின் அருமையை விளக்கவந்த தொடர். பாடும் புலவரின் நுண்மாண் நுழைபுலத்தை உலகோர்க்கு எடுத்துக் காட்டும் பருவம்-அம்புலிப் பருவம். இதனைத் திருவாசகமணி அவர்கள் அமைத்திருக்கும் திறம் எண்ணிஎண்ணி இன்புறத்தக்கது. "பொருளற்ற வுலகில்நீ இருளதை யகற்றுவாய், புந்தியிருள் இவனிக்குவான்; தேய்ந்துவளர் கின்றகலை யல்லா திவன்போன்று தேயாமுழுக்கலையிலாய்" என்றெல்லாம் பாடுகின்ற புலவர், "உருசிய நாட்டினர் முப்பாலை மதிப்பவர்கள்; மதியே! நீ திருவள்ளுவக் குழந்தையை மதித்து ஆடவரவேண்டும்; இல்லையேல் அவர்கள் நிலவுமண்டலம் வந்து உன்னைச் சாடுவார்கள்" என்று காலத்துக்கேற்ற கற்பனை நயங்கொண்டு, "சீலனிவன் நூற்குறள் சாலஅறி ருசியர்கள் சினமார்ந்து கண்சிவப்பத் தம்மக்கள் மூலநின் சந்த்ரமண்டலமார்ந்து சாடிடுவருனை யறிகுவாய்!" என்று சு[illegible] எத்துணை நயமாயுள்ளது?

இங்ஙனம் தொட்ட இடமெல்லாம் நறுஞ்சு[illegible] அருங்கனியெனத் திகழ்வது இப்பிள்ளைத்தமிழ் நூ[illegible] னும், "கைவைத்திலைப்பழஞ்சோறுசுடுதேன் [illegible] விசிறிவீசிக், கனிவைத்தகைகளால் பணி[illegible] டிரைத்திடுங்கால், மெய்வைத்த கணவ[illegible] டபடிகயிறுநிற்ப விட்டதனை மின்னெ[illegible]

விமலிவா சுகிகொழுநனே!" என்று பழங்கதை போற்றுவது அறிஞர்உலகு ஆராயத்தக்கது. தமிழ்ப் பெருமக்களனைவரும் இந் நூலினை வாங்கிப் பயன்பெறுவார்களாக!

—ச. சாம்பசிவன்.

பிரபுலிங்க லீலை-வினுவிடை

[ஆசிரியர்: பண்டித வித்துவான் ச. சாம்பசிவன், தமிழ் விரிவுரையாளர், மதுரைத் செந்தமிழ்க் கல்லூரி, தமிழ்ச் சங்கம், மதுரை—1. பக்கம்: 96. விலை ரூ. 1-50.]

சிவ பெருமானின் சாயலாகிய அல்லம தேவரின் விளையாடல் களை விளக்கிக் கூறும் நூலே பிரபுலிங்கலீலை. பிரபு-செல்வன்; லிங்கம்-குறி; அஃதாவது அடையாளம். பிரபுவாகிய லிங்கம். இஃது அருவுருவாய சதாசிவத்தை யுணர்த்தும். லீலை யென்பது விளையாட்டு. பொய்யறிவு மெய்யறிவுப் போர் நிகழ்வதும் மெய் யறிவு பொய்யறிவை வெல்லுவதுமாகிய உட் கருத்துகள், அல்லமதேவர் மாயை வயப்படாது வெல்லும் செயலைத் தலைமை யாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. பிரபுலிங்க லீலை இருபத் தைந்து கதிகளை உடையதென்பது யாவருமறிந்த செய்தி. இங்குக் கதிகளென்றது படலங்களை. இந்நூலாசிரியர் கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார். சிவப்பிர காசச் செம்மலியற்றிய நூல்கள் பல சிறந்தன. அவையாவுமே மிகச் சிறந்தனவென்ருலும் 'பிரபுலிங்கலீலை' அடிகளாரின் கற்ப னைக் கருவூலமாகி மிகமிகச் சிறந்ததொன்ருகும். இஃது ஆசிரி ...் கேட்டு விளங்கும் இயல்பினதேயன்றி மாணவர் தாமாக ... விளங்கும் இயல்புடையதாகாது. இந்நூலில் ஓரைந்து ...ல்கலைக் கழக முதனிலை வகுப்பினர்க்குப் பாடமாக ...ஞெராவது வகுப்பில் தேறிப் பல்கலைக் கழக முத ... சேர்ந்து பயிலுமாணவர்கள், தெளிவானதொ... ...ரிந்து கோடலும், தக்க விடைதருதலும் அரிய ...லையென்னும் ஆறு கடத்தற்கு வினவிடை ...ான்றது. இவ்வினவிடை நூலிற் காணப்

படும் வினாக்களும், அவ்வினாக்களுக் கமைந்த விடைகளும் இந் நூலாசிரியரான பண்டித-வித்துவான் திரு. ச. சாம்பசிவமவர்களுடைய ஒட்பத்தையும் நுட்பத்தையும் நன்கு புலனாக்க வல்லன. மாணவர்க்கு இந்நூல் பெரிதும் உதவியாதலோடு மற்றையோர்க்கும் இஃது ஐயமறுக்கவல்லது. நூல் முழுமைக்குமே இங்ஙனம் வினாவிடையமையுமாயின் அது பெரும் பயனல்க வல்லதென்பது எமது கருத்து.

கட்டுரைத் திறவுகோல்.

[ஆசிரியர்: பண்டித வித்துவான் ச. சாம்பசிவன், தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1. பக். 122. விலை ரூ. 1–75.]

நல்லாசிரியர் இயல்பு கூற வந்த தொல்லாசிரியர், கலைபயில் தெளிவோடு கட்டுரை வன்மையும் அவர்க்கு வாய்க்க வேண்டுமென்பர். இங்குக் கட்டுரை யென்றது பல நூற்கருத்தும் தொகுத்து மாணவர்க்குக் கற்பித்தலை. ஆயிர ராயிரவராக மக்கள் கூடிய கூட்டத்தில் விரித்துரைப்பதும் கட்டுரையே. இது காலப் போக்கில் அவ்விரிவுரையை எழுதி வைத்தலையுங் குறிப்பதாயிற்று. விரித்துக் கூறுவதிற் சிலர் தேர்ந்திருப்பர். சிலர் விரித்தெழுவதிற் றேர்ந்திருப்பர். ஒரு சிலரே கூறுவதிலும் எழுதுவதிலும் தேர்ந்திருப்பர். "சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்னும் இப் பழந்தொடர், முயன்றால் நன்கு பேசுதலையும் எழுதுதலையும் பலரும் பாராட்டு முறையிற் பெற முடியுமென்பதைப் புலப்படுத்தும். பேசவும் எழுதவும் அறியாதாரும், இவ்விரண்டில் யாதானும் ஒன்று அறிந்தாரும் கற்றிருந்தாலும், ஒரு வகையாலும் இந்நாட்டுக்கு உதவாதவரேயாவர். அடிக்கடி பேசியும் எழுதியும் வருவோர் நல்ல பேச்சாளராவதும் எழுத்தாளராவதும் கண்கூடு. எவர்க்கும் எழுத்தாளராவதற்குப் பயிற்சி வழங்குவதே இக்கட்டுரைத் திறவுகோல். இந்நூல் கட்டுரை வகைகள், கருத்துச் செறிவு, உவமைத் தொடர், பழ

மொழித் தொடர், பிழையின்றி யெழுதும் வழிகளாகியவற்றைப் புலப்படுத்துகின்றது. இந்நூலாசிரியரான பண்டித-வித்துவான் திரு. ச. சாம்பசிவமவர்கள் ஒரு பத்துக் கட்டுரைகளும் சான்றாக எழுதிக் காட்டியுள்ளனர். இவைகள் இனிய எளிய செந்தமிழ் நடையில் மிளிர்கின்றன. பச்சிலைகளைக் கொண்டு மட்டுமே மாலை கட்டுவது போலக் கருத்தில்லாமலோ, ஒன்றிரண்டு கருத்துக் களைக் கொண்டோ கட்டுரை யெழுதுவோர், இந்நூலைத் துணைக் கொள்வரேல் படிப்படியாக எழுத்தாற்றல் பெறுவது ஒருதலை யென்பது எமது கருத்து. பொதுவாக இந்நூல் அனைவர்க்கும் பயன்படும்; சிறப்பாக வித்துவான் நுழைவு, முதனிலை மாணவர்க் குப் பெரிதும் பயன்படும்.

—பண்டித மீ. கந்தசாமிப்புலவர்,

பைந்தமிழ்க் காவலர் பாஸ்கர சேதுபதி மன்னர் நூற்றுண்டு விழா

1-10-68, இராமநாதபுரத்தில்

தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் நிகழ்த்திய

தொடக்கவுரை

தமிழ்ப் பெருமக்களே!

மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்களுக்குப் பின், தமிழகத்தில் ஆங்காங்கே அவ்வப்பொழுது ஆட்சிபுரிந்தோர்களில், தமிழ் மன்னர்கள் என்று கூறத் தகுதி பெற்றோர் சேதுபதிகளேயாவர். தெய்வ பக்தியிலும், தாய்மொழிப் பற்றிலும் மூவேந்தர்களைப் போன்றே இவர்களும் விளங்கினர். இவர்களிடத்து வள்ளல் தன்மையும் இயற்கையாக அமைந்திருந்தது. பொதுவாக, மண், நீர், காற்று ஆகிய மூன்றும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு சிறப்புப் பெற்று விளங்கும் என்பது தமிழ்மக்கள் கண்ட உண்மை. காவிரி நீர் இசைப் புலமையை வளர்க்கும் ஆற்றல் பெற்றது. இசை உலகில் திருமூர்த்திகள் என விளங்கும் தியாகராயர், தீட்சதர், சாமாசாஸ்திரி ஆகிய மூவரும் காவிரிக் கரையில் தோன்றியவர்கள். இராமநாதபுரம் மண் பல இயல் புலவர்களைத் தோற்றுவிக்கும் ஆற்றல் பெற்றது. இதற்குச் சான்று சேதுபதி பரம்பரையினரும் அவர்களால் ஆதரிக்கப் பெற்ற புலவர்கள் பலருமேயாவர். அத்தகைய தமிழ் மண்ணில் சேதுபதிகளின் பரம்பரையில் தோன்றிய ஓர் ஒப்பற்ற திலகமாக விளங்கிய பெருந்தகை பாஸ்கரசேதுபதியவர்கள். அவர்களின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாட இங்கு நாம் கூடியுள்ளோம்.

சென்ற ஆண்டு பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நூற்றுண்டு விழாவை இந்நகரில் சிறப்பாகக் கொண்டாடினேம். அப்பெரியாரின் ஒன்றுவிட்ட சகோதரரும் இணைபிரியாத தோழருமான பாஸ்கரசேதுபதி அவர்களின் நூற்றுண்டு விழா

விலும் பங்குகொள்ள, ஒரு வாய்ப்பினை எனக்குக் கொடுத்த பெருமக்களுக்கு முதற்கண் எனது நன்றி உரித்தாகுக.

பாண்டித்துரைத்தேவரின் தந்தையும் பாஸ்கரசேதுபதியின் தந்தையும் உடன் பிறந்தோராவர். பாண்டித்துரைத்தேவர், பாஸ்கர சேதுபதிக்கு ஓராண்டு மூத்தவர். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள்; புலமை மிக்கவர்கள்; கவி பாடும் ஆற்றலும் பெற்றவர்கள்.

இன்று பாஸ்கர சேதுபதியை நேரில் பார்த்தவர்கள், நம்மிடையே ஒரு சிலரே இருப்பர். அத்தகைய நற்பேறு பெற்றவர்களில் நானும் ஒருவன் என்று கூறிக்கொள்வதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன், நான் சிறுவனாக இருந்த காலம்; சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் எங்கள் வீடு ஒருநாள் திடீரென்று விழாக்கோலம் பூண்டது. பெரிய பெரிய தட்டுகளில்வகை வகையான பழங்களும், தேங்காய்களும் வைக்கப்பெற்றிருந்தன. எனது தந்தையாரும், பெரிய தந்தையாரும், மற்றும் குடும்பத்திலிருந்த பெரியவர்களும் மிகமகிழ்ச்சியுடன் யாரோ ஒருவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். இரு குதிரைகள் பூட்டிய கோச்சுவண்டி ஒன்று வீட்டின் முன் நின்றது. கம்பீரத் தோற்றமுடைய ஒருவர் புன்சிறிப்புடன் அதிலிருந்து இறங்கி வந்தார். ''மகாராஜா'' என்று எல்லோரும் அவரை வரவேற்றனர். அவ்வாறு வருகை தந்த பெரியார் பாஸ்கர சேதுபதியவர்களே யாவார்கள். இளமனதில் அன்று பதிந்த அக்காட்சி இன்றும் எனது மனதைவிட்டு அகலாமலிருக்கின்றது. எனது தந்தையாரின் தமிழ்ப்பற்றே மன்னரை எங்கள் இல்லத்திற்கு வருகை தரச்செய்தது என்று நான் நினைக்கின்றேன். நான் சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் பொழுதும் பலமுறை அவரைப் பார்க்கும் வாய்ப்பைப் பெற்றேன்.

அரச பரம்பரைகளில் உயர்வு தாழ்வு ஏற்படுவது இயல்பு என்பது வரலாற்று உண்மையாகும். அவ்வாறு சேதுபதிகளின் பரம்பரை தளர்ச்சியுற்ற காலத்தில் பாஸ்கர சேதுபதி தோன்றினார். தன் பெயருக்கு இணங்க சேதுபதிகளின் புகழை எங்கும் பரப்ப ஓர் ஒப்பற்ற ஞாயிறாக ஒளி வீசினார். பாஸ்கர சேதுபதி தமிழ்ப் புலமையுடன் ஆங்கிலப் புலமையும் பெற்றிருந்தார்.

அவருடைய வள்ளல் தன்மை எல்லையற்றது. வரவுக்கு மிஞ்சிய தாக இருந்தது.

மொழிப் பற்றைப் போன்றே அவர் தெய்வப் பற்றிலும் சிறந்து விளங்கினர். அவர் எழுதிய நாட்குறிப்பைப் பார்த்தால் அவருடைய உள்ளக் கிடக்கை தெள்ளத் தெளிவாக விளங்கும்.

1893-ஜனவரி 13-ஆம் தேதி எழுதிய குறிப்பில் தன்னுடைய வாழ்க்கைக் குறிக்கோள் என்ன என்பதைப் பற்றி 33 கருத்துக்களைக் குறித்துள்ளார். சமஸ்தானத்தைச் சேர்ந்த கோவில்கள் ஒவ்வொன்றிலும் என்னென்ன திருப்பணிகள் செய்ய வேண்டும். என்னென்ன ஆபரணங்கள், வாகனங்கள் செய்ய வேண்டும்; மதுரை, சிதம்பரம் போன்ற பல முக்கிய ஸ்தலங்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதுடன் மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவவேண்டும், பிராமணரல்லாத ஏழை மாணவர்களுக்கு விடுதி அமைக்கவேண்டும், தமிழ் வடமொழி ஆகிய ஒவ்வொரு மொழியிலும் 12 அரிய நூல்களைப் பதிப்பிக்க வேண்டுமென்றும், இவைபோன்ற பற்பல தன்னலமற்ற சிறந்த குறிக்கோள்களை உடையவராக இருந்தார் என்பதை அந்நாட் குறிப்பு எடுத்துக் காட்டுகின்றது. முடிவாக அவர் மூன்று எண்ணங்கள் நிறைவேற வேண்டுமென்று ஆண்டவனை வேண்டிக் கொள்கின்றார். அவை படிப்போர் மனத்தை உருக்கும்படி அமைந்துள்ளன. ஆண்டவனை அவர் வேண்டிக்கொண்டதெல்லாம், தன்னை ஈன்ற அன்பு அன்னைக்கு இறுதிக் கடன் தன் கையால் செய்யவேண்டும், தன் அன்பிற்குறிய பாண்டித்துரைச் சாமித் தேவருக்கு முன்னர் தான் மரணமடையவேண்டும், இறுதிக் காலத்தில் நோய் வாய்ப்பட்டுப்படுக்காது, இறைவனைத் தியானித்துக் கொண்டே, அவன் திருவடிகளையடைய வேண்டும் என்பவைகளேயாகும்.

பாஸ்கர சேதுபதியின் வாழ்க்கைக் குறிக்கோளைப் பார்க்கும்பொழுது அவர் எவ்வளவு சிறந்த உள்ளம் படைத்தவர் என்பது புலனுகின்றது. அப்பெரியாரும் அதற்கு ஒப்ப வாழ்ந்தார் என்பதனை அவர் வரலாறு கூறும்.

வெளிநாட்டு மக்களுக்கு முதல்முதலாக இந்து சமயத்தை அறிமுகம் செய்து வைத்தவர் சுவாமி விவேகானந்தர் ஆவார்கள்.

அவ்வரிய செயலையாற்ற விவேகானந்தரைத் தூண்டியவரும், அதற்கு வழிவகுத்துக் கொடுத்தவரும் பாஸ்கர சேதுபதியவர்களேயாவார். இதை எண்ணி, சேது நாட்டு மக்கள் மட்டுமல்ல, தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இன்று பெருமையடைகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டிற்கு, இந்து சமயப் பிரதிநிதியாக அனுப்ப, பாரத நாட்டில் அன்று பாஸ்கர சேதுபதி ஒருவர்தான் இருந்தார், தான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெறவேண்டுமென்று அவர் எண்ணினார். அவர் எண்ணம் வெற்றிபெற்றது. மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் அமைக்கப் பாண்டித்துரைத் தேவருக்கு உறுதுணையாக இருந்தவர் பாஸ்கர சேதுபதி.

எனக்கு பாஸ்கர சேதுபதி, முத்துராமலிங்கசேதுபதி, சண்முகராஜேஸ்வர சேதுபதி, இராமநாதசேதுபதி ஆகிய நான்கு தலைமுறைச் சேதுபதிகளைத் தெரியும். இன்று நம்மிடையேயுள்ள இராமநாத சேதுபதி இளைஞராயினும் அவருடைய மூன்று முன்னோர்களின் நல்ல குணங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றவர். அவர்களுக்கு இருந்த அதிகாரமும் பொருளும் இவருக்கு இன்று இல்லாமலிருக்கலாம். ஆனால் நல்ல உள்ளம் என்ற பெருஞ்செல்வத்தைப் பெற்றுள்ளார். அதிகாரமும் பொருளும் நிலையானதல்ல. இக்காலத்தில் அவைகளைப் பெறுவதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. நல்ல உள்ளம் பிறப்பிலேயே அமையவேண்டும். அத்தகைய உள்ளம் படைத்தவர்களிடத்தில் பொருள் சேர்வதே திருவள்ளுவர் கூறியபடி நடு ஊரில் பழமரம் பழுத்தற்கு ஒப்பாகும். எனது நண்பர் இராமநாத சேதுபதி எல்லாச் சிறப்புகளையும் பெற்று நீடு வாழ்ந்து, சேதுபதிகளின் புகழைத் தொடர்ந்து நிலைநாட்ட, எல்லாம்வல்ல இறைவன், அவருக்கு அருள் புரிய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு, இவ்விழாவைத் தொடங்கி வைக்கின்றேன்.

வாழ்க சேதுபதி மரபினர்!
வாழ்க தமிழ்!

இளங்கோ அச்சகம், மதுரை-68.



இந்தியக் குடியரசுத் தலைவர்

டாக்டர் சாகீர் உசேன் அவர்கள்

தோற்றம்: 1897 மறைவு: 1969

நம் சங்கத்தின் தலைமைப் புரவலர் (Patron-in-Chief), இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு. டாக்டர் சாகிர் உசேன் அவர்கள், 3–5–69 முற்பகல் 11-20 மணியளவில், புதுதில்லியில், திடுமென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக இம்மண்ணுலக வாழ்வை நீத்தனர் என்ற செய்தி, இந்தியப் பெருமக்களாகிய நம்மனைவர்தம் உள்ளத்தையும் வருத்தும் கொடுஞ் செய்தியாகும்.

டாக்டர் சாகிர்உசேன் அவர்கள் 1897-இல் ஐதராபாத்தில் பிறந்தார். அலிகார் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புப் படித்த பின், பெர்லின் பல்கலைக் கழகத்தில் பி.எச் டி. பட்டமும்பெற்றார். அண்ணல்காந்தியடிகளோடு அணுக்கத் தொடர்பு கொண்டு இந்திய விடுதலை இயக்கத்திற் பங்குபெற்றார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகப் பணிபுரிந்திருக்கிறார். அமைதியான முறையில், ஆடம்பரமில்லாமல் கல்விப் பணிபுரிந்த இந் நல்லாருக்குப் 'பத்ம விபூசன்' 'பாரத இரத்தின' முதலான பட்டங்கள் கிடைத்தன. 1957-இல், பீசார்மாநில ஆளுநராகவும் பணிபுரிந்துள்ளார் 1962-இல், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1967-இல் குடியரசுத் தலைவர் பொறுப்பேற்றுத் தாம் இறக்குந்துணையும், இந்திய மக்களின் நல்வாழ்வுக்குத் துணையாய் நின்றார். அழியாத இலக்கியங்களை உருவாக்கிய பெருமையும் இவர்க்குண்டு. அமைதியும் அடக்கவுணர்வும் உடையவர்; அறிவாற்றல் நிறைந்தவர்; எளிய வாழ்வு மேற்கொண்ட ஏந்தல்; இந்து முசுலீம் ஒற்றுமைக்காக உழைத்த உரவோர். இந்நற் பண்புகளைக்கொண்ட டாக்டர் சாகிர் உசேன் அவர்களின் மறைவு-ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. இத்தகு சான்றோரை இழந்து வருந்தும் குடும்பத்தினருக்கு இத்தமிழ்ச் சங்கம் தன் ஆழ்ந்த துயரைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவர்களின் நல்லுயிர், இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவும் வேண்டுகின்றது.